விலை: 30.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 092 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 07 திங்கட்கிழமை (21.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

EDUS
Learning made lovable
சிறந்த ஒன்லைன் கல்விக்கான நிரந்தர தீர்வு...!
தரம் 1 - G.C.E A/L வரை
Professional Courses for Beginners
www.edus.lk | 0777 123 330
(10684)

## ஜனாதிபதி தலைமையில் நாளை மறுதினம் சர்வகட்சி மாநாடு



### கூட்டமைப்பு பங்கேற்கும்
இரா. சம்பந்தன் அறிவிப்பு

(கொழும்பு)
நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு 15

### ராஜபக்சக்களுக்கு உயிர்கொடுக்கமுடியாது
கஜேந்திரகுமார் எம்.பி

(யாழ்ப்பாணம்)
சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்று ஓட்டுமொத்தமான மக்களின் 15



இன்று முதல்
பால் தேனீர்
100 ரூபாய்
03 ஆம் பக்கம் பார்க்க

# மகிந்தவின் பதாகைகளை எரித்து யாழில் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்திற்கு இரண்டு நாட்கள் விஜயம் மேற்கொண்ட பிரதமர் மகிந்த ராஜபக்சவை வரவேற்கும் முகமாக மட்டுவிலில் கட்டப்பட்டு இருந்த பதாகைகளை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் எரித்து தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். (15ஆம் பக்கம் பார்க்க)



ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம் எழுதும்
ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள்
நாளை உங்கள் வலம்புரியில்

## தண்ணீர்க் கானுக்குள் தவறி வீழ்ந்த குழந்தை மரணம்
புதுக்குடியிருப்பில் பரிதாபம்

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் தண்ணீர்க் கானுக்குள் தவறி வீழ்ந்த இரட்டை குழந்தைகளில் ஒன்று உயிரிழந்தமை அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.
நேற்றுமுன்தினம் மலசலகூடத்திற்காக 15



## முள்ளிவாய்க்காலில் பேருந்து கவிழ்ந்ததில் ஒருவர் உயிரிழப்பு; பலர் படுகாயம்

(பனிக்கன்குளம்)
முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் பகுதியில் தனியார் பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணம் - முல்லைத்தீவுக்கிடையில் பயணிக்கும் தனியார் பேருந்து ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியு 15



30 வருடகால இருண்ட யுகத்தை அழித்து
## வடக்கு மக்களுக்கு சுதந்திரத்தை மீளப்பெற்றுக் கொடுத்துள்ளோம்
யாழில் பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாணத்தில் காணப்பட்ட 30 வருடகால இருண்ட யுகத்தை இல்லாதொழித்து வடக்கு மக்களின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் மீளப் பெற்றுக்கொடுத்துள்ளோம்.
வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலான 15

## யாழில் மதவேற்றுமைகளை தோற்றுவித்த பிரதமர் மகிந்த



(16 ஆம் பக்கம் பார்க்க)

## மிகவும் ஆபத்தான கட்டத்தில் இலங்கை
எதிர்க்கட்சித் தலைவர் எச்சரிக்கை

(கொழும்பு)
பொய்கள் மேலோங்கி வருவதாகவும் அதன் விளைவாக நாடு தீவிர ஆபத்தான நிலைக்கு தள்ளப்பட்ட வண்ணமுள்ளதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான 15

நல்லூரில் கடும் எதிர்ப்பு
## மாவிட்டபுரம் சென்று வழிபட்டார் மகிந்த

(யாழ்ப்பாணம்)
பிரதமர் மகிந்த ராஜபக்ச திடீரென நல்லூர்க் கந்தசுவாமி ஆலயவழிபாட்டை இரத்துச்செய்து நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் சென்று வழிபட்டார். 16

வடக்குக்கு இன்று
## சூறாவளி எச்சரிக்கை

(கொழும்பு)
தென்கிழக்கு வங்கக்கடலில் குறைந்த காற்றமுத்த தாழ்வு பகுதி காற்றமுத்த தாழ்வு மண்டலமாக 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்கப் போவதில்லை

## ஜே.வி.பி அறிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதியினால் கூட்டப்படும் சர்வகட்சி மாநாட்டில் ஜே.வி.பி பங்கேற்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாடு, பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்காக அல்ல. அரசாங்கத்திற்குள் உள்ள அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்காகவே கூட்டப்படுகிறது என்று ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இரண்டு முக்கிய அமைச்சர்கள் நீக்கப்பட்டதையடுத்து அரசாங்கத்திற்குள் ஏற்பட்டுள்ள அரசியல் முரண்பாடுகளை களைய ஜனாதிபதிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் விளைவே சர்வகட்சி மாநாடு என்று அவர் தெரிவித்தார்.

கோவிட் தொற்றுநோயின்போது இதே போன்ற சர்வகட்சி மாநாடு, ஜனாதிபதியால் கூட்டப்பட்டது.

எனினும், அரசாங்கம் கட்சித் தலைவர்களின் முன்மொழிவுகளுக்கு செவி சாய்க்கவில்லை.

மாறாக அதன் சொந்த நிகழ்ச்சி நிரலை தொடர்ந்தது என்று அனுரகுமார குறிப்பிட்டார். (ஞா)

# மூளாயில் விபத்து; குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மூளாய் பகுதியில் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மற்றொருவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நியு கமால் மாபிள் விற்பனை நிலையத்தில் கணக்காளராக பணியாற்றும் காரைநகர் கருங்காலியை சேர்ந்த சங்கரப்பிள்ளை நித்தியானந்தராசா (வயது-49) என்பவரே உயிரிழந்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மாணவனான மூளாயைச் சேர்ந்த ஆனந்தகுமார் கஜீபன் என்ற இளைஞரே காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மூளாய் - மாவடி வீதியில், காளிகோயிலுக்கு சமீபமாக இருவரும் பயணித்த மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ஞா-33)

## இந்தியாவுக்கு கடத்தப்படவிருந்த

# ரூ.12 கோடி பெறுமதியான தங்கத்துடன் இருவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக கடல்வழியாக இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படவிருந்த சுமார் ஆறு கிலோ தங்கத்துடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பேருந்து ஒன்றை கொழும்பு ஆமர் வீதியில் சோதனையிட்ட போது வெல்லம்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 38 வயதான நபர் தங்கத்துடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் இந்த தங்கம் கடல் வழியாக இந்தியாவுக்கு கடத்திச் செல்லப்படவிருந்த தகவல் கிடைத்துள்ளது. இதனையடுத்து இந்த கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு நபர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். கைப்பற்றப்பட்டுள்ள தங்கத்தின் பெறுமதி 12 கோடி ரூபாயுக்கும் மேல் என தெரியவந்துள்ளது.

தங்கம் எங்கிருந்து கிடைத்தது? எவ்வளவு காலம் இந்த கடத்தல் நடைபெற்று வருகிறது? என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஞா)

# கொரோனாவால் 5 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் நேற்று முன்தினம் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி 5 பேர் மாத்திரம் உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் இதுவரை 16, 431 பேர் கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, கோவிட் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 624, 592 ஆக உயர்ந்துள்ளது. (ஞா)


## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு. **சு. மாதுலன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

**வேலாயுதபிள்ளை சுபாஸ்சந்திரன்**



அவர்கள் மறைவுற்றதால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், நல்லூர்.**

(C-4024)

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி **கமலினி தனரூபன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

**கிருஸ்ணர் குணரத்தினம்**



அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம், பிர்தேச செயலகம், நல்லூர்.** (C-4025)

## மணிவிழா வாழ்த்து

யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் ஆசிரியராய், பகுதித் தலைவராய், உதவி அதிபராய் சேவையில் இருந்து ஓய்வுபெறும்

**திருமதி நிரஞ்சனாதேவி கிருபாகரன்** அவர்கள்



வேதியர் குலத்தில் தோன்றி வென்றிட இங்கே கற்று
போதிய பயிற்சி பெற்றுப் புனிதமாம் பள்ளி வந்து
பாதியில் சிலநாள் வேறோர் பள்ளியில் சேவை செய்தும்
மீதிநாள் முழுமைச் சேவை மேதினி போற்றும் பண்பால்
ஆதியாம் பாரம் பரியம் அர்த்தமாய் பள்ளி கொள்ள
சேதிகள் சொல்லும் ஒருவர் செப்பிட வரலா றுண்டே
போதிய பணிகள் செய்தீர் புகழ்ந்திடப் போற்றுகின்றோம்

ஓய்வுகாலம் நலமுடனும் வளமுடனும் சிறக்கட்டும்

**இணைந்து பணியாற்றிய முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை** (10711)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகர்/ நல்லூர் / கச்சேரி/ அரியாலை போன்ற பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை.

(10710)

**077 839 5849**

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறையில் புலோலி வடகிழக்கில் 10 பரப்புள்ள தோட்டக்காணி உடன் விற்பனைக்கு உண்டு.

(10713)

**077 711 1716**

## இதய அஞ்சலி



குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமம் அமைந்துள்ள இல்லத்தில் பிறந்து தனது கல்விப்புலமையால் **அமெரிக்கா நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் விஞ்ஞானியாகப்** பணியாற்றி எம் மண்ணுக்குப் பெருமை சேர்த்த

**கலாநிதி வைத்திலிங்கம் துரைசாமி** அவர்கள்

தனது 90ஆவது வயதில் அமெரிக்காவில் காலமானார். எனது மனைவி அமரர் திருமதி **ஞானலக்ஷ்மி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி** அவர்களின் தாய்மாமனாகிய துரைமாமாவின் ஆத்மா குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் திருவடியில் ஆறுதல் பெற வேண்டுகின்றோம்.

**ஆ. ...மூர்த்தி**
**சிவபூமி குப்பிழான் ஞான ஆச்சிரமம், குப்பிழான்.** (C-4026)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாசங்கத்தின் ஆலோசனைக்கு மதிப்பளிக்காவிடின் எமது ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியாது

## முருத்தெட்டுவே ஆனந்த தேரர் எச்சரிக்கை

(கொழும்பு)

**மகாசங்கத்தினரது ஆலோசனைக்கு புறம்பாக அரசாங்கம் செயற்படுமாயின் இனிவரும் காலங்களில் அரசாங்கம் மகாசங்கத்தினரது ஒத்துழைப்பை பெற முடியாது.**



சிறந்த ஆலோசனைகளுக்கு நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ மதிப்பளிப்பதில்லை ஆகவே அவர் தொடர்பில் கருத்துரைக்க முற்றிலும் விரு ம்பவில்லை என முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

நாட்டில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலைமையில் அரசியல் நெருக்கடியும் தற்போது தீவிரமடைந்துள்ளது.

நாட்டு மக்கள் அரசாங்கத்தை கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் மனநிலையை எம்மால் நன்கு உணரமுடிகிறது.

பாரியளவிலான அபிவிருத்தி பணிகளை தற்காலிகமாக நிறுத்தி மக்களுக்கான அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்ற கவனம் செலுத்துமாறு அரசாங்கத்திற்கு பலமுறை ஆலோசனை வழ ங்கியுள்ளோம்.

மக்களின் வெறுப்பை பெற் றுக்கொண்டால் அது அரசா ங்கத்தின் இருப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாணும் வகையில் சர் வகட்சி மாநாட்டை நடத்த ஜனாதிபதி தீர்மானித்துள்ளமை வரவேற்கத்தக்கது.

அனைத்து அரசியல் கட்சிகளும் தற்போதைய நெருக்கடி நிலைமையினை கருத்திற்கொண்டு அரசியல் நோக்கங்களை துறந்து ஒன்றிணைந்து நாட்டுக்காக செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

## பால் தேநீரின் விலை 100 ரூபாவாக உயர்வு

(கொழும்பு)

ஒரு கோப்பை பால் தேநீர் 100 ரூபாவாக விலை உயர்த்தப்படவுள்ளது என உணவக உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் இது அமுலுக்கு வருவதாக அச்சங்கம் தெரிவித்துள்ளது. (நி-5)

## அதிகரிக்கப்பட்ட தொலைபேசிக் கட்டணங்கள்

(கொழும்பு)

சர்வதேச தொலைபேசி அழைப்புக்கட்டணங்கள்அதிகரிக்கப்பட்டுள்ளதாக தொழில்நுட்ப அமைச்சு தெரிவித்துள்ளது.அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபாய் 30 வீதம் வரை மதிப்பிழந்துள்ளதன் காரணமாக சர்வதேச தொலைபேசி அழைப்புக்கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

எனினும் தேசிய தொலைபேசி அழைப்பு கட்டணங்கள் மற்றும் இணையத்தள கட்டணங்களை அதிகரிக்க இதுவரை அனுமதி வழங்கவில்லை எனவும் தொழில்நுட்ப அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5)

## மரக்கறிகளின் விலையில் பாரிய வீழ்ச்சி!

(யாழ்ப்பாணம்)

மரக்கறிகளின் மொத்த விலை, நேற்று பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது இதனால் கடந்த வாரம் பாரியளவில் அதிகரித்து காணப்பட்ட மரக்கறிகளின் விலை வீழ்ச்சியிடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு நேற்று காலை யாழ்ப்பா ணத்தில் இருந்து பெருந் தொகையான மரக்கறிகள் கொண்டு வரப்பட்டதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர். (நி-5)

## எரிபொருள் வாங்க வரிசையில் நின்ற மேலுமொரு முதியவர் உயிரிழப்பு

(கொழும்பு)

எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக நீண்ட வரி சையில் காத்திருந்த மற்றுமொ ருவர் உயிரிழந்துள்ளார்.

கடவத்தையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலை யத்தில் நீண்ட வரிசையில் காத்திருந்த 70 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை நேற்று முன்தினம் கண்டியில் எரிபொ ருளை பெற்றுக் கொள்ள நீண்ட வரிசையில் காத்திருந்த 71 வயதான முதியவர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## முகக் கவசங்களுக்கான விலை 30 சதவீதத்தினால் அதிகரிப்பு

(கொழும்பு)

முகக் கவசங்களுக்கான விலை 30சதவீதத்தினால் அதிகரிக்கப்படவுள்ளதாக அகில இலங்கை முகக்கவச உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

முகக்கவசங்களை தயாரிப்பதற்கான மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல் காரணமாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் விதுர அல்கம தெரிவித்துள்ளார். (நி-5)


என் அப்பப்பாவை நான் நினைத்துப் பார்க்கின்றேன்...

7ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 22.09.1944
விண்ணுலகில் 08.04.2015

நேற்றும், இன்றும், நாளையும்
ஏன் ஒவ்வொரு நாளும்
நான் உங்களை நினைக்கிறேன்.
நான் மௌனமாக
உங்களை நினைத்து,
உங்களை அழக்கழ சுப்பிடுகிறேன்.
கடவுள் உங்களைத்தன்
கரங்களில் எடுத்துக்கொண்டார்.
ஆனால் என் இதயத்தில்
எப்போதும் நீங்கள் இருக்கின்றீர்கள்.
என்னிடம் இருப்பதெல்லாம்
உங்கள் நினைவுக் குறிப்புகள்
மற்றும் ஒன்றாக எடுத்த
நிழற்படங்கள் மட்டும் தான்.
ஒவ்வொரு நாளும் நான்
உங்கள் இனிமையான குரலைக்
கேட்க வேண்டும் என்று எனக்கு
ஆசை,
அதனால்,சொர்க்கத்திற்கு ஒரு
தொடர்பாடல் கருவி
இருக்க வேண்டும் என்றும்
ஆசைப்படுகிறேன்.
நான் உண்மையில் கடந்த காலத்திற்கு
பயணிக்க விரும்புகிறேன்.
அது என் தவறுகளைத்
திருத்துவதற்காக அல்ல,
இப்போது என்னுடன் இல்லாது போன
என் அப்பப்பாவிற்கு முத்தம்
கொடுப்பதற்காக.
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
ஏழு வருடங்கள் ஆகிறது அப்பப்பா.
கடந்த காலத்திற்கு பயணிக்கும்
வழியிருந்தால்
உங்களை மீண்டும் சந்திக்கலாம்,
உங்களை மடியில் இருந்தபடி
பாட்டுக்களும் கதைகளும்
கேட்டு மகிழலாம்.
நான் உங்களை நேசிக்கின்றேன்
என் அன்பான அப்பப்பா.

போத்தி ஜே.விவேகா



கலாபூஷணம்- கலைவாரிதி
இரத்தினசிங்கம் கிருஷ்ணதுரை
(பண்ணாகம்)

(I0707)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீலங்களின் சமர்

# இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது ஐயனார்



வவுனியா மாவட்டத்தில் நீலங்களின் சமர் முக்கோண தொடர் இடம்பெற்று வருகின்றது.

இத்தொடரின் இரு போட்டிகளில் வெற்றி பெற்ற ஐயனார் விளையாட்டு கழகம் நேற்று முன்தினம் இடம்பெற்ற மூன்றாவது போட்டியிலும் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. நேரம் போதாமை காரணமாக 48 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்டு இடம்பெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஐயனார் விளையாட்டு கழகம் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

இதன்போது 48 ஓவர்களிற்கு ஐயனார் விளையாட்டு கழகம் 9 விக்கெட்களை இழந்து 221 ரன்களை பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் அனோஜன் 01 சிக்ஸ், 09 பவுண்டரிகள் அடங்கலாக 42 ரன்களையும், மிதுன் 04 பவுண்டரிகள் அடங்கலாக 28 ரன்களையும், கேசவன் 04 பவுண்டரிகள் அடங்கலாக 29 ரன்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் தமிழ் யுனைடெட் சார்பாக வீரக்கோன் 03 விக்கெட்களையும், நுவான் 02 விக்கெட்களையும் கைப்பற்றினர்.


222 ரன்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தமிழ் யுனைடெட் 32.2 ஓவர்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து 199 ரன்களை மட்டும் பெற்று தோல்வியைத் தழுவிக் கொண்டது.

இதன் மூலம் ஐயனார் விளையாட்டு கழகம் 22 ரன்களினால் வெற்றி பெற்று கொண்டது. துடுப்பாட்டத்தில் 01 சிக்ஸ் 07 பவுண்டரிகள் அடங்கலாக 30 ரன்களையும், 03 சிக்ஸ் 11 பவுண்டரிகள் அடங்கலாக 76 ரன்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் ஐயனார் விளையாட்டு கழகம் சார்பாக சத்தியராஜ் 04 விக்கெட்களையும், சுரேன் மற்றும் மிதுன் 02 விக்கெட்களையும், நிசாந்தன் 01 விக்கெட்டையும் பெற்றுக் கொண்டனர். இவ் வெற்றியின் மூலம் நீலங்களின் சமர் முக்கோண தொடரில் 03 போட்டிகளில் வெற்றி பெற்ற ஐயனார் விளையாட்டு கழகம் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. (4-5-299)



யாழ்.உதைப்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் தலைவர் கிண்ண உதைபந்தாட்ட தொடரில் அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கடந்த 18 ஆம் திகதி நாவாந்துறை சென் நீக்கிலஸ் உதைபந்தாட்ட அணியை எதிர்த்து ஞான முருகன் அணி மோதியதில் 6-3 என்ற கோல் கணக்கில் நாவாந்துறை சென் நீக்கிலஸ் அணி வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்கு தெரிவாகியது. (படம்:-ஏனெஸ்ட்)



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில், கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் "றொகான் வலைப்பந்து பயிற்சிக்கூடம்" அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. (படம்:- சிவசாந்தன்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2540

### நிகல்யா

பேராசை பெரு நட்டம்ன்னு இப்பதான் தெரிஞ்சது எப்போ?



2000 ரூபா நோட்டுனு நெனச்சு , ரோட்ல கிடந்த நிஜாம் பாக்கு கவரை எடுக்கும் போது...

### தனுசன்

மதிய நேரத்தில் TANK தண்ணியில் முகம் கழுவிய பிறகு



ஐயோ மூஞ்சி பொசுங்கிப் போச்சே

### வித்தியா

50 கிலோ இருக்கிற பொண்ணக்கூட ஈசியா தூக்கிடுவோம்.. ஆனா 15 கிலோ சிலிண்டர தூக்க கஷ்டப்படுவோம்..



விரும்பி செஞ்சா எந்த வேலையா இருந்தாலும் ஈசியா இருக்கும்..

### பிரபா

நேர்மையாக இருந்து எதை சாதித்து விட்டாய் என்று கேட்பவர்களிடம்



தைரியமாகச் சொல்லுங்கள் நேர்மையாக இருப்பதே பெரிய சாதனைதான் என்று

### வேணுகா

"கருவுற்றால்" ஒரு குழந்தைக்கு மட்டும் தான் அன்னையாக முடியும்



ஆனால் "கருணையுற்றால்" ஆயிரம் குழந்தைகளுக்குக்கூட அன்னையாக முடியும்.

### விமலன்

என்னடா 50 ரூபாய்க்கு பொருள் வாங்கிட்டு 50 சாக்லேட் குடுக்குற



சில்லரை இல்ல சில்லரை இல்லைன்னு ஒரு மாசமா நீ குடுத்ததுதான்டா அது. உனக்கு வந்தா ரத்தம் எனக்கு வந்தா தக்காளி சட்னியா

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவணை பரீட்சைகள் நடத்துவதில் எவ்வித தடையும் இல்லை

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)
மாகாணமட்டத்தில் தவணைப் பரீட்சைகளை நடத்துவதில் எவ்வித தடையும் இல்லை என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி வினாத்தாள்களை அச்சிடுவதற்கான காகிதம் மற்றும் மூலப்பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை. காகிதம் மற்றும் மூலப்பொருட்களுக்கான தட்டுப்பாடு காரணமாக வினாத்தாள் அச்சிடுவதில் தடை ஏற்பட்டுள்ளதாக வெளியான தகவல் தொடர்பில்.மாகாண மட்டத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

வடமேல், சப்ரகமுவ, வடமத்திய, கிழக்கு, ஊவா மாகாணங்களில் அவ்வாறான நிலைமை ஏதும் இல்லை என மாகாண கல்வி பணிப்பாளர்கள் எமக்கு அறிவித்துள்ளனர்.

கல்வி நடவடிக்கைகளுக்கான காகிதத்தை கொள்வனவு செய்வதில் ஏதேனும் பிரச்சினை ஏற்படும் பட்சத்தில், இந்திய கடன் வசதியின் கீழ் குறித்த பிரச்சினை நிவர்த்தி செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-5)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திரு
## செல்லையா இராசலிங்கம்
(நாகையா)

பிறப்பு: 01.05.1937
இறப்பு: 01.04.2021



இப்பூவுலகில் பிறப்பவர்கள் இறப்பது
உலக நியதியே!
ஆனாலும் உங்களின் இழப்பை
எம்மால் ஏற்க முடியவில்லையே
அன்பென்ற ஒற்றைச் சொல்லால்
எம்மை எல்லாம் கட்டுப்படுத்திய
உங்கள் நினைவுகள்
எம் உடலில் உயிருள்ளவரை
மறக்க முடியாதது
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனை தினம் இறைஞ்சுகின்றோம்.

கந்தர்மடம்
யாழ்ப்பாணம் (10702)

க.ஞானரூபி
(மருமகள்-கருணா)

# இராசிபலன்

21.03.2022
பங்குனி 07,திங்கட்கிழமை
திருதியை முற்பகல் 10.17 மணிவரை

சுவாதி முன்னிரவு 11.18 மணிவரை
சுபநேரம்- 12.17-1.47 மணிவரை
இராகுகாலம் -7.47-9.17 மணிவரை

சங்கடகர சதுர்த்தி விரதம், முதலாம்பங்குனித்திங்கள்
சந்திராஷ்டமம் உத்திரட்டாதி ரேவதி

வளவன்


மேஷம்
வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், நண்பர்கள் சந்திப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கடகம்
தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், விருப்பங்கள் நிறைவேற அம்பிகையை வழிபட வேண்டிய நாள்


துலாம்
சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள் ,கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.


மகரம்
பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம்,கனவுகள் நெனவாக அம்பிகையை வழிபட வேண்டிய நாள், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு.


ரிஷபம்
ஆடம்பர பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும் ,அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள் ,செய்தொழில் மேன்மையுண்டு, உற்சாகமான நாள்


சிம்மம்
உறவினர்கள் நண்பர்களால் வளர்ச்சி கூடும்,பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும்


விருச்சிகம்
பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம்,காரியங்களில் வெற்றி பெற அம்பிகையை வழிபட மேவண்டிய நாள்,அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.


கும்பம்
ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு.


மிதுனம்
சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம் ,தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


கன்னி
எந்தக்காரியத்தையும் எளிதில் செய்து முடித்து முன்னேற்றம் காண்பீர்கள்,திடீர் பயணம் மகிழ்ச்சி தரும்,வாக்கு மேன்மையுண்டு,உற்சாகமான நாள்.


தனுசு
அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம்,பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், எண்ணங்கள் நிறைவேற அம்பிகையை வழிபட வேண்டிய நாள்.


மீனம்
குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், விரயங்கள் கூடும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லது நடக்கும் என நம்பு, தீயதை எதிர் கொள்ள தயாராகி விடு

# காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை மீள இயங்க வைக்க தீர்மானம்



(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை விஜயம் செய்தார்.

1950 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை 1990 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக மூடப்பட்டது.

2021 பெப்ரவரி 08 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் எஞ்சிய கட்டிடங்களை எதிர் கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

எனினும் 80 வீதமான கட்டிடங்களை புனரமைத்து பயன்படுத்த முடியும் என பிரதமரின் விஜயத்தின் போது தெரிய வந்துள்ளது.

அதன்படி காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை புனரமைக்க அரசாங்கம் முன் வந்துள்ளது.

பிரதமருடன் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராம நாதன் மற்றும் இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தின் தலைவர் காமினி ஏகநாயக்க ஆகியோரும் சென்றிருந்தனர். (4-5-18-33)

## பிரபாகரனின் அருமையை சிங்களவர்கள் உணர்கின்றனர்

### சிறீதரன் எம்.பி.

(கிளிநொச்சி)

பிரபாகரனின் அருமையை தற்போது சிங்கள மக்களும் உணரத் தொடங்கியுள்ளனர் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பச்சிலைப்பள்ளி பிரதேச கட்சியின் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், இன்று இலங்கையின் பொருளாதாரம் அதலபாதாளத்திற்குள் சென்றுள்ளது. இந்த நிலையில் சிங்கள மக்களே அரசை விமர்சிக்கின்ற காணொளிகள் இப்போது வருகிறது. பிரபாகரன் வடக்கு கிழக்கை கேட்டார் அவரிடம் வடக்கு கிழக்கை கொடுத்திருந்தால் இன்று நாம் அவரிடம் இருந்து கடனை வாங்கி இருக்கலாம் என்று கூறுகிறார்கள்.

எங்கள் தலைவனின் அருமையினை இப்போது சிங்கள மக்களும் உணரத் தொடங்கியிருக்கிறார்கள். சத்தியம் ஒருபோதும் தோற்பது கிடையாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-5)

## நல்லாட்சி காலத்தில் அபிவிருத்தி ஏற்படவில்லை

### யாழில் பிரதமர் மகிந்த

(சாவகச்சேரி)

நாம் உங்களை மறக்கவும் மாட்டோம், கைவிடவும் மாட்டோம் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தமிழில் தெரிவித்தார். நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம்-மட்டுவில் பொருளாதார மத்திய நிலையத் திறப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

நாம் வடக்கு மக்கள் வாழக்கூடிய ஓர் நிலைமையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். நாம் வடக்கில் மாகாண சபையை உருவாக்கினோம். ஆனால் 2015 அந்த செயற்பாட்டிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

நாம் உருவாக்கிய வடக்கு மாகாணசபையை நல்லாட்சி காலத்தில் கலைத்தார்கள். அந்த நல்லாட்சி காலத்தில் யாழில் ஒரு வீதி கூட அபிவிருத்தி செய்யப்படவில்லை. உண்மையை சொல்லவேண்டுமானால் முழு நாட்டிலும் அந்த நல்லாட்சி காலத்தில் அபிவிருத்தி நடக்கவில்லை.

நல்லாட்சி காலத்தில் யாழ்ப்பாணத்தில் மின் நிலையம் ஒன்று அமைத்திருந்தால் இன்று யாழ்ப்பாண மக்கள் இருளில் இருந்திருக்க மாட்டார்கள்.

நாம் 2019 இல் நாட்டை மீளக் கட்டியெழுப்பும் போது தான் கொரோனா பேரிடர் ஏற்பட்டது. கொரோனாவில் இருந்து இளைய சமுதாயத்தை மாத்திரமன்றி முதிய சமுதாயத்தையும் பாதுகாத்துள்ளோம் என அவர் தெரிவித்தார். (4-5-30)



நெல்லியடி உதவி பொலிஸ் பொறுப்பதிகாரி தயானந்தன் தலைமையில் கரணவாய் உப்புரோட் மண்டன் இரு பக்க வீதிகளிலும் 2500 நிழல் தரும் மரக்கன்றுகள் நேற்று நட்டு வைக்கப்பட்டன. (படம்:-மகாலிங்கம்)

# கேள்வி அறிவித்தல்
## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.
## சபைநிதி 2022

01. தவிசாளர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளைஅவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட புனரமைப்பு வேலைகளுக்காக கோருகின்றார்.
02. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் விலைக்கேள்வியாளர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி மற்றும் கட்டுமானஅமைப்புக்கான சிடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 04 (Section IV) இலும் மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
05. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037, தொலை நகல் 0212050036 இல் இருந்து 21.03.2022 ஆம் திகதியில் இருந்து 04.04.2022 வரை மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பிற்பகல் 16.00மணிவரை அலுவலக நாட்களில் விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
06. அக்கறை கொண்டுள்ளவிலைக் கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்னும் முகவரியில் 21.03.2022 ஆம் திகதியிலிருந்து 04.04.2022 ஆம் திகதி வரை காலை 9.00 மணிக்கும் பிற்பகல் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 2000.00 (VATநீங்கலாக) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
07. விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளைஎன்னும் முகவரிக்கு 04.04.2022 ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்வி தொடர்பானமுதற்கூட்டம் பச்சிலைப்பள்ளிபிரதேசசபை, பளைஎன்னும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் 29.03.2022 ஆம் திகதியன்றுபிற்பகல் 14.30 மணிக்கு நடைபெறும். இதில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமதுசொந்தசெலவில் கலந்துகொள்ளமுடியும்.
09. கீழேஅட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறானகேள்விப் பிணைப் பொறுப்புகேள்வியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. சமர்பிக்கப்பட்டகேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகைVATநீங்கலாக(RsMn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/3/cf/w/9/2022 | Reconstruction of Kilaly pre school road | 1.83 Mn | 60 நாட்கள் | C9 and C8 (வீதி) | 30,000.00 | 19.06.2022 |
| NP/14/45(3)/PL/3/cf/w/6/2022 | Construction of boundry wall at Puloppalai sub office | 0.709Mn | 60 நாட்கள் | C9 and C8 (கட்டுமானம்) | 12.000.00 | 19.06.2022 |
| NP/14/45(3)/PL/3/cf/w/8/2022 | Construction of Pallakkaddu road | 0.762Mn | 60 நாட்கள் | C9 and C8 (வீதி) | 12.000.00 | 19.06.2022 |
| NP/14/45(3)/PL/3/cf/w/7/2022 | Construction of Kadampavanam road | 0.873 Mn | 60 நாட்கள் | C9 and C8 (வீதி) | 14,000.00 | 19.06.2022 |
| NP/14/45(3)/PL/3/cf/w/11/2022 | Construction of Kurukkal road 4th lane &Arasankudiyiruppu internal road | 1.56 Mn | 60 நாட்கள் | C9 and C8 (வீதி) | 25,000.00 | 19.06.2022 |

**சுப்பிரமணியம் சுரேன்**
**தவிசாளர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளிபிரதேசசபை, பளை.** 21.03.2022

(சி-4013)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார மத்திய நிலையம் பிரதமரால் திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம்-மட்டுவில் பிரதேசத்தில் 200 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாண விசேட பொருளாதார மத்திய நிலையம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டது.**



விவசாயிகள் தமது உற்பத்திகளை தகுந்த விலையில் விற்பனை செய்வதற்கும் - நுகர்வோர் குறைந்த விலையில் மரக்கறிகள் மற்றும் பழங்களை கொள்வனவு செய்வதற்குமான வசதிகளை உருவாக்கும் நோக்கில் கமத்தொழில் இராஜாங்க அமைச்சினால் குறி த்த பொருளாதார மத்திய நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

கமத்தொழில் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவின் வழிகாட்டுதலின் கீழ் இடம்பெற்ற இவ் வைபவத்தில் பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன், வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், கமத்தொழில் அமைச்சின் அதிகாரிகள், தென்மராட்சிபிரதேச செயலர், சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் உள்ளிட்டோர் பங்குபற்றியிருந்தனர்.

(4-5-30-33)

## குப்பிழானை சேர்ந்த

# நாசா விஞ்ஞானி துரைசாமி காலமானார்

(குப்பிழான்)

அமெரிக்காவின் நாசா விண் வெளி மையத்தில் நீண்ட காலம் கடமையாற்றி குப்பிழான் மண் ணுக்கும், ஈழ மண்ணுக்கும் பெருமை சேர்த்த தமிழ் விஞ் ஞானி கலாநிதி. வைத்தி லிங்கம் துரைசாமி கடந்த 17 ஆம் திகதி தனது 90 ஆவது வயதில் அமெ ரிக்காவில் காலமானார்.



அவர் 1968 ஆம் ஆண்டு நாசா விண்வெளி மைய ஆராய்ச்சி மையத் தில் அப்பலோ-11 ஐ அனுப்புகின்ற குழுவில் அங்கம் வகித்தவர். (4-5-18)



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்பாள் திருமண மண்டபத்தில் இரத்ததான முகாம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர் மாற்றம்
## சந்தை வீதி, இல.83/17 வட்டாரம்-11

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 11 சந்தை வீதியிலுள்ள இல.83/17 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் "தம்பிமுத்து பெண் சிவபாக்கியம்" என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தின் ஓர் பகுதியினை தம்பிமுத்து கைம்பெண் சிவபாக்கியம் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு A.நித்தியானந்தன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 09/19.10.1954ம் இலக்க உறுதியால் "இராமலிங்கம் செல்வதுரை" ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்றுச் சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த "தம்பிமுத்து கைம்பெண் சிவபாக்கியம்" காலஞ்செல்ல குறித்த ஆதனம் அவரின் வாரிசுகளான தம்பிமுத்து புஸ்பபதியும், தம்பிமுத்து தனபாலசிங்கமும் ஆகியோருக்கு முதுசமாக வந்தடைந்தது.

குறித்த ஆதனத்தினை "சிவகந்தராஜன் பெண் சாருகேசி" ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு R.T. கனகரட்ணம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1560/30.07.1991ம் இலக்க உறுதி யால் குறித்த "தம்பிமுத்து புஸ்பபதியும், தம்பிமுத்து தனபாலசிங்கமும்" ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தின் மற்றைய பகுதியினை "குழந்தைவேலு தம்பிமுத்துவும் பெண் சிவபாக்கியமும்" ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு பொ.கணபதிப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4704/02.03.1940 ஆம் இலக்க உறுதியால் குறித்த "கதிரேசு வைத்திலிங்கம்" ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தில் ஓர் பகுதியினை "குழந்தைவேலு தம்பிமுத்துவும் பெண் சிவபாக்கியமும்" ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு பொ.கணபதிப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4705/02.03.1940 ஆம் இலக்க உறுதியால் குறித்த "கதிரேசு வைத்திலிங்கம்" ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த "சிவசுந்தராஜன் பெண் சாருகேசி" ஆகியவர் தமக்கு குறித்த ஆதனத்தின் சொந்தமும் ஆட்சியும் குறித்த 4704ம் இலக்க நன்கொடை மற்றும் 4705ம் இலக்க அறுதி உறுதி மூலம் தனது காலஞ்சென்ற மாமியாராகிய தம்பிமுத்து சிவபாக்கியத்திற்கு சொந்தமாக வந்தடைந்தது என்றும் அவர் குறித்த ஆதனத்தை சுமார் 30 வருடங்களுக்கு முன்பு தனக்கு வாய்ச்சொல் நன்கொடை வழங்கியிருந்தார் என்றும் அக்காலம் தொடக்கம் தானே நீண்டகால ஆட்சி செய்து வருவதுடன் இக்காணியின் பிரயோசனங்களை தானே பெற்று அனுபவித்து வருவதுடன் இக்காணிக்குரிய ஆதன வரியை தனது பெயரிலேயே செலுத்தி வருவதாகவும் குறித்த ஆதனத்தை தனது சொந்த ஆதனமாக வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு து.பாக்கிய நாதன் முகதாவில் 2757/28.05.2000 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதி யொன்றை நிறைவேற்றியுள்ளார்.

குறித்த ஆதனத்தினை "கணபதிப்பிள்ளை சிவப்பிரகாசமும் பெண் வாலாம்பாளும்" ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7067/22.08.2005ம் இலக்க உறுதியால் குறித்த "சிவசுப்பிரமணியம் சிவானந்தரா சாவும் பெண் சாருகேசியும்" ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்! குறித்த ஆதனத்தினை "சிவப்பிரகாசம் இராசானந்தனும், சிவப்பிரகாசம் குகானந்தனும்" ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநா தன் முகதாவில் 7356/15.09.2005 ஆம் இலக்க உறுதியால் குறித்த "கணபதிப்பிள்ளை சிவப்பிரகாசமும் பெண் வாலாம்பாளும்" ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த "சிவப்பிரகாசம் இராசானந்தனும், சிவப்பிரகாசம் குகானந்தனும்" ஆகியவர்கள் ஆதனங்களின் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.!

இவ் ஆதனங்களின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனங்களானது "சிவப்பிரகாசம் இராசானந்தனும், சிவப்பிரகாசம் குகானந்தனும்" ஆகியவர்களுக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனங்களின் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தவிசாளர்/செயலாளர்
வலிகாமம் மேற்கு பிரதேச சபை. (10696)


## ஆறு இந்திய மீனவர்களுக்கும்

# ஒத்திவைக்கப்பட்ட ஓராண்டு சிறைத் தண்டனை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆறு இந்திய மீனவர் களுக்கு ஓராண்டு சிறைத் தண்டனை விதித்து அதனைப் பத்து வருடங்களுக்கு ஒத்தி வைத்து ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் தீர்ப்பளித்துள்ளார்.

இந்திய தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டம் நம்புதாளை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து நாட்டுப்படகில் மீன் பிடிக்கச் சென்ற ஆறு மீனவர்களை இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்து ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலை யில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் மீனவர்களின் வழக்கு கடந்த 18 ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

குற்றப் பத்திரத்தில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டமை மற்றும் கைது செய்யும் வேளையும் வலைகளைத் தொடக்கறுத்து வைத்திருக்காமை ஆகிய இரு குற்றச்சாட்டுக்கள் நீரியல் வளத் துறையினரால் முன்வைக்கப்பட்டது.

இரு குற்றங்களுக்கும் தலா ஆறு மாத சாதாரண சிறைத் தண்டனை பத்து வருடங்களுக்கு ஒத்தி வைத்து நீதிவான் உத்தரவிட்டார்.

(4-5-18-33-60)


## வீடு வாடகைக்கு உண்டு

சுன்னாகம், சூறாவத்தை றோட் ரட்ணா பல் பொருள் வாணிபத்தடி, சுன்னாகம் கிழக்கு ஊரிசாட்டி சிவபூதராஜர் கோயிலடி துரைபேக் ஹவுஸ், பேக்கரியில் பெரிய அரசமர ஒழுங்கையில் இடது பக்க மூன்றாவது வீடு வாடகைக்கு உண்டு. (கிறிஸ்தவ கத்தோலிக்க சமய மாணவர்களுக்கு மட்டும் வாடகைக்கு விடப்படும். (10708)

தொடர்பு: 077 372 3916


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்



## ஆயுதக் கழிவுகளை அகற்ற பல ஆண்டுகள் ஆகலாம்

### உக்ரைன் அமைச்சர்

(கீவ்)

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு முடிந்தாலும் உக்ரைன் மண்ணில் இருக்கும் ரஷ்ய படைகளின் ஆயுதக்கழிவு களை அகற்ற பல ஆண் டுகள் ஆகலாம் என உள்துறை அமைச்சர் டெனிஸ் மொனா ஸ்டிர்ஸ்கி தெரிவித்தார்.


உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு முடிந்தாலும் உக்ரைன் மண்ணில் இருக்கும் ரஷ்ய படைகளின் ஆயுதக் கழிவு களை அகற்ற பல ஆண்டு கள் ஆகலாம் எனவும், இதற்கு மேற்கத்திய நாடு களின் உதவி நிச்சயம் தேவைப்படும் எனவும் உக் ரைன் உள்துறை அமை ச்சர் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் தெரிவிக் கையில், "உக்ரைன் மீது ஏராளமான குண்டுகள் மற்றும் கண்ணிவெடிகள் வீசப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பகுதி வெடிக் கவில்லை. அவை இடிபாடு களுக்கு அடியில் இருந்து உண்மையான அச்சுறுத் தலை ஏற்படுத்துகின்றன. அவற்றை அகற்ற மாதங் கள் அல்ல, வருடங்கள் ஆகும்" எனத் தெரிவித் தார்.

மேலும் அவர், ரஷ்யா வின் ஆயுத கழிவுகள் தவிர, ரஷ்ய படைகளின் ஆக்கிரமிப்பை தடுக்க விமான நிலையங்கள், பாலங்கள் உள்ளிட்ட முக் கிய இடங்களில் உக்ரைன் வீரர்கள் கண்ணிவெடி களை புதைத்துள்ளனர்.

அவற்றையும் எங்க ளால் உடனடியாக அகற்ற முடியாது. எனவே இவற்றை அகற்ற அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் உதவி தேவை எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

## போருக்கு மத்தியிலும் விண்வெளி சென்ற ரஷ்யர்கள்



(மொஸ்கோ)

ரஷ்யா- அமெரிக்கா இடையே மோதல் போக்கு இருந்து வரும் நிலையில் 3 ரஷ்ய விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலை யத்துக்கு சென்றுள்ளனர்.


சர்வதேச விண்வெளி நிலையத்தை அமெரிக்காவின் நாசா, ரஷ்யா, ஜப்பான், ஐரோப்பா, கனடா ஆகியவை இணைந்து அமைத்து உள் ளன. இங்கு சுழற்சி முறையில் விண்வெளி வீரர்கள் அனுப் பப்பட்டு வருகிறார்கள்.

ஒருமுறை செல்லும் விண் வெளி வீரர்கள் சுமார் 6 மாதங்கள் வரை சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கி இருந்து பணியாற்று வார்கள். அதன்பின் பூமிக்கு திரும்புவார்கள்.

இந்த நிலையில் ரஷ் யாவை சேர்ந்த 3 விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்தை நேற்று முன் தினம் சென்றடைந்தனர். உக் ரைன் மீது போரை தொடங்கி யுள்ள ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா உள்ளது. இவ்விவ காரத்தில் ரஷ்யா- அமெரிக்கா இடையே மோதல் போக்கு இருந்து வருகின்றமை குறிப்பி டத்தக்கது. (நி-5)

## துருக்கியில் திறக்கப்பட்டது

### உலகின் மிக நீளமான தொங்கு பாலம்



(அங்காரா)

உலகின் மிக நீளமான தொங்குபாலம் துருக்கியில் நேற்று முன்தினம் திறக்கப் பட்டது.

முக்கிய நீர்வழிப்பாதை யான ஐரோப்பிய மற்றும் ஆசியக் கரைகளை இணைக்கும் டார்டனெல் லஸ் ஜல சந்தியில் ஒரு பெரிய தொங்கு பாலத்தை துருக்கியின் ஜனாதிபதி மற்றும், தென் கொரிய பிரதமர் இணைந்து நேற்று முன்தினம் திறந்து வைத்தனர்.

ஏஜியன் கடலை மர் மாரா கடலுடன் இணை க்கும் டார்டனெல்லை பட கின் மூலமாக பயணிகள் கடக்க காத்திருப்பு என அனைத்தையும் சேர்த்து 5 மணி நேரம் தேவைப்படு கிறது.

ஆனால், தற்போது இந்த புதிய பாலத்தின் மூலமாக இந்த பயணமானது வெறும் ஆறு நிமிடங்களில் சாத்தியமாகின்றமை குறிப் பிடத்தக்கது. (நி-5)

## உக்ரைனில் குவியும் போர் ஆயுதங்கள்

### ரஷ்யாவின் எச்சரிக்கையை மீறும் அமெரிக்கா

(வோஷிங்டன்)

ரஷ்ய ராணுவத்தின் தாக்குதலை எதிர் கொள் வதற்கு ஏதுவாக அமெரிக்கா வழங்க முன்வந்துள்ள ஜவேலின் மற்றும் ஸ்டிங்கர் ஏவுகணைகள் உக்ரைனை விரைவில் வந்தடையும் என தகவல் வெளியாகியுள்ளது.

உக்ரைன் மேற்கத்திய நாடுகளின் இராணுவ கூட்ட மைப்பான நேட்டோ அமை ப்பில் சேருவதற்கு ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்து முன்னெ டுத்த போரானது நான்காவது வாரமாக தொடர்ந்து வரு கிறது.

இந்த நிலையில் இரா ணுவ பலத்தில் ரஷ்யா வுடன் ஒப்பிட்டுப் பார்க்கை யில், உக்ரைனின் ராணுவ பலமானது மிகவும் குறை வானதாகவே கருதப்படு கிறது. எனவே உக்ரைன் இராணுவ பலம் மற்றும் ஆயுதங்களின் எண்ணி க்கையை அதிகரி க்கும் வகையில், உக்ரை னுக்கு அமெரிக்கா ஆயுத உத விகளை செய்ய முன்வந்து ள்ளது.


அந்த வகையில், ஜவேலின் மற்றும் ஸ்டிங்கர் போன்ற ஏவுகணைகளின் தொகுப்பை ஏற்கனவே அனுப்பிவைத்து இருந்த நிலையில், ஜவேலின் மற்றும் ஸ்டிங்கர் ஏவுக ணைகளின் அடுத்த தொகு ப்பும் விரைவில் வந்தடையும் என அந்த நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு கவுன்சில் செயலாளர் ஒலெக்ஸி டானிலோவ் தெரி வித்துள்ளார்.

இதனிடையே உக்ரை னுக்கு நேட்டோ நாடுகள் ஏதும் ஆயுதங்களை வழங்க முன்வந்தால் தக்க பின் விளைவுகளை சந்திக்க நேரிடும் என எச்சரித்து இருந்ததும் குறிப்பிடத் தக்கது. (நி-5)

## உலக அ...

## போர்...

## நா...



உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை தொடர்ந்து 26 ஆவது நாளாக முன்னெடு க்கப்பட்டு வருகின்ற நிலையில், போரை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக சீன மற்றும்

## உக்ரைன் ஜ...

## நோபல் பரி...



(கீவ்)

இந்த ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசை உக்ரைன் ஜனாதிபதி விளாடி மிர் ஜெலன்ஸ்கிக்கும், அந் நாட்டு மக்களுக்கும் வழங்க பரிந்துரைக்க விரும்புவதாக அமைதிக்கான நோபல் பரிசை வழங்கும் நோர்வே நோபல் குழுவுக்கு இந்நாள், முன்னாள் ஐரோப்பிய அரசியல் வாதிகள் பலர் ஒரு வேண்டுகோள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியை நிலைநாட்ட ஒத்துழைப்பு அவசியம்

# களத்தில் சந்திக்கும் நிலைக்கு

# நாடுகள் வரக் கூடாது

## – அமெரிக்காவை அழைக்கும் சீனா –



(பீஜிங்)

**உலக அமைதி மற்றும் அமைதிக்கான சர்வதேச பொறுப்புகளை தோள்களில் சுமக்க அமெரிக்கா மற்றும் சீனா கூட்டாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என சீனா அழைப்புவிடுத்துள்ளது.**

அமெரிக்க தலைவர்கள் இருவரும் காணொளி வாயிலாக ஆலோசனை நடத்தினர்

இதன்போது கருத்து தெரிவித்த சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், 'தற்போது நிலவும் அமைதி மற்றும் வளர்ச்சிப் போக்கு கடுமையான சவால்களை எதிர்கொள்கிறது.

உலகம் அமைதியாகவோ, நிலையானதாகவோ இல்லை. உக்ரைன் நெருக்கடி நாம் பார்க்க விரும்பும் ஒன்றல்ல. போர்க் களத்தில் சந்திக்கும் நிலைக்கு நாடுகள் வரக்கூடாது என்பதை மீண்டும் இந்த நிகழ்வுகள் காட்டுகின்றன' என தெரிவித்துள்ளார்.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் நடந்ததாக கூறப்படும் இந்த உரையாடலின் போது, உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவை ஆதரித்தால் விளைவுகள் மிகவும் மோசமாக இருக்கும் என சீனாவை ஜோ பிடன் எச்சரித்துள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

ஆனால் இந்த எச்சரிக்கைக்கு சீன தரப்பில் என்ன கூறப்பட்டது என்பது பற்றித் தெரிவிக்கப்படவில்லை. (நி-5)

# னாதிபதி ஜெலன்ஸ்கிக்கு

# சு வழங்க பரிந்துரை



விடுத்துள்ளனர்.

அத்துடன் அமைதிக்கான நோபல் பரிசு பரிந்துரை நடைமுறைக்கான காலத்தை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நீடிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

இந்த ஆண்டுக்கான நோபல் அமைதிப் பரிசுக்கு 251 தனிநபர்களும், 92 நிறுவனங்களும் விண்ணப்பித்துள்ளன.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதிக்குள் நோபல் பரிசு அறிவிப்பு வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், மருத்துவம், இலக்கியம் ஆகிய துறைகளிலும், உலக அமைதிக்கும் சிறந்த பங்காற்றியவர்களுக்கு ஆண்டு தோறும் நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இங்கிலாந்தில் பெரும் காட்டுத் தீ



(லண்டன்)

இங்கிலாந்து நகரமான லிவர்பூலுக்கு வெளியே நேற்று முன்தினம் சனிக்கிழமை பெரும் காட்டுத்தீ பரவி சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டது.

லிவர்பூலுக்கு தெற்கே 11 கி.மீற்றர் தொலைவில் உள்ள விரால் தீபகற்பத்தில் உள்ள பார்க்கேட் இயற்கை காப்பகத்தைச் சுற்றி வானத்தில் பெரும் தீப்பிழம்பு மற்றும் புகை மூட்டம் ஏற்பட்டுள்ளதை உள்ளூர்வாசிகள் சமூக ஊடகங்களில் வெளியிட்ட காட்சிகளில் காண முடிகிறது.

தீயானது 500 சதுர மீற்றர் தூரத்துக்கு சதுப்பு நிலக் காடுகளை எரித்துள்ளது என செஷயர் தீயணைப்பு மற்றும் மீட்பு சேவை பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தீ பரவலுக்கு நாசகார செயல் காரணமாக இருக்கலாம் எனவும் தீயணைப்பு பிரிவினர் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் தீயைக் கட்டுப்படுத்தும் பணிகள் தொடர்வதாகவும் நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் தீயணைப்பு மற்றும் மீட்பு சேவை பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர். (நி-5)

# உக்ரைன் வான் பரப்பை

## ரஷ்யாவினால் கட்டுப்படுத்த முடியவில்லை

### பிரித்தானியா அறிவிப்பு

(லண்டன்)

உக்ரைன் வான்பரப்பை கட்டுபடுத்த ரஷ்யாவுக்கு முடி யாமல் போயுள்ளதாக பிரித்தானியா அறிவித்துள்ளது. பிரித்தானியாவின் பாதுகாப்பு அமை ச்சின் அண்மைய புலனாய்வுத் தகவல்கள் இதனை உறுதிபடுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உக்ரைனுக்கு எதிரான போர் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்து அந்நாட்டு வான்பரப்பை கைப்பற்றுவது ரஷ்யாவின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக உள்ளது.

எனினும் அவர்களுக்கு அது முடியாமல் போயுள்ளதாக வும் அவர்களது முன்னேற்றம் கணிசமான அளவு கட்டுப்படுத்தப்படுவதாகவும் பிரித்தானியா அறிவித்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கான இழப்பீடு

# சாட்சியங்களை மறைக்கும் செயல்

## அருட்தந்தை சக்திவேல் சுட்டிக்காட்டு

(நெளுக்குளம்)

**பயங்கரவாதத்தின் இன்னுமொரு திட்டமே காணாமல் ஆக்கப்பட்டோருக்கான மரண சான்றிதழ் அல்லது காணாமல் ஆக்கப்பட்டமைக்கான சான்றிதழ் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.**

நேற்று அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார பிரச்சினைக்கு மத்தியில் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ள மக்கள் அடுத்த வேளை உணவிற்கே கையேந்தும் நிலை ஏற்பட்டுள்ளது. இப்பொருளாதார சிக்கலுக்கு முகம் கொடுத்து கொண்டிருக்கும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை தனது நரி நாடகத்தில் சிக்க வைக்கும் முயற்சியாகவே ஒரு லட்சம் ரூபா கொடுப்பதாக ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

மேலும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் வறுமை நிலையை பயன்படுத்தி மரணச் சான்றிதழ் அல்லது காணாமல் போனதற்கான சான்றிதழை கொடுத்து போராட்டத்தை சிதைக்கவும் அமைப்புக்குள் கருத்து மோதலை உருவாக்கவும் ஆட்சியாளர்கள் காய் நகர்த்துகின்றனர்.

வட, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஐந்து வருடங்களை கடந்தும் தொடர் போராட்டம் நடத்துவது அரசு அறிவிக்கும் ஒரு லட்ச ரூபா பிச்சைப் பணத்தை பெற்றுக் கொள்வதற்கு அல்ல. தமிழ் உயிருக்கு உயிரான உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்கும் அதற்கான நீதியை பெற்றுக் கொள்வதற்குமாகும்.

இதனை கொச்சைப்படுத்துவதை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது. இதற்கு காணாமல் ஆக்கப்பட்டோரை தேடும் உறவுகளே "நாங்கள் உங்களுக்கு பணம் தருகிறோம் எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்று கூறுங்கள்" என்று பதிலடி கொடுத்துள்ளனர்.

ஒரு லட்சம் தருகிறோம் எனக் கூறுவது போராட்டத்தை அசிங்கப்படுத்தும் செயல் மட்டுமல்ல நீதிக்காக போராடும் ஒட்டுமொத்த தமிழர்களையும் இழிவுபடுத்தும் செயலுமாகும்.

இதுவும் சாட்சியங்களை மறைக்கும் அல்லது இல்லாதொழிக்கும் அரசின் கொலை என தெரிவித்தார். (4-5-299)

# கரை ஒதுங்கியது படகு



(சென்னை)

தமிழகத்தின் நாகை மாவட்டம் கோடியக்கரை பகுதியில் இலங்கை நாட்டைச் சேர்ந்த பைபர் படகு ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

அப்பகுதி கடலோர காவல் குழு மற்றும் பொலிஸார் படகை பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.(4-5-100-285)

# பத்தாயிரம் லீற்றர் கோடா நூறு லீற்றர் கசிப்பு

## இராணுவத்தால் அழிப்பு



(முறிகண்டி)

ஒரு மாத காலப்பகுதியில் பத்தாயிரம் லீற்றர் கோடா, 100 லீட்டர் கசிப்பு இராணுவத்தால் அழிக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலிற்கு அமைவாக கிளிநொச்சி கட்டைக்காடு குளப்பகுதியில் இவ்வாறு அழிக்ககப்பட்டுள்ளது. நேற்று முன்தினமும் கசிப்பு உற்பத்திக்கு தயாராக இருந்த 20 பரல்கள் இவ்வாறு அழிக்கப்பட்டதாகவும், ஒரு மாத காலப் பகுதிக்குள் குறித்த பகுதியில் பத்தாயிரம் லீட்டர் கோடா, 100 லீற்றர் கசிப்பு இராணுவத்தால் அழிக்கப்பட்டு ள்ளதுடன், 100 பரல்கள், வடிப்பதற்கு பயன்படுத்தும் உபகரணங் களும் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (4-5-100)

# 5885 ஹெக்டேயர் நிலப்பரப்பில் வவுனியாவில் சிறுபோக நெற்செய்கை

## சேதன உரம் பெறமுடியாத நிலையில் விவசாயிகள்

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கை சுமார் 5885 ஹெக்டேயரில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.



இம்முறை வவுனியா மாவட்டத்தில் 5885 ஹெக்டேயர் அளவில் சிறு போக நெற்செய்கையினை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், தற்போது வரை 2000 ஹெக்டேயர் வரை நெற்செய்கை நடவடிக்கை முன்னெடுக்கப்பட் டுள்ளது.

இதேவேளை பெரும்போக நெற்செய்கையின் போது இரசாயன உரம் மற்றும் கிருமி நாசினிகளிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டதனால் சிறந்த விளைச்சல் இன்மை காரணமாக விவசாயிகள் பெரும் கஷ்டத்திற்குள்ளான நிலையில் தற்போது சிறுபோக நெற் செய்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் சேதனப் பசளையினை பயன்படுத்தி சிறுபோக செயற்பாடுகளை முன்னெடுக்க திட்டமிட்டுள்ள நிலையில், கமநல சேவை நிலையங்கள் ஊடாக சேதன பசளைகள் உரிய நேரத்தில் விவசாயிகளிற்கு வழங்கப்படும் என்று அரசு தெரிவித்திருந்தது.

இருந்த போதும் கமநல சேவை நிலையங்களிற்கு தேவையான சேதன பசளைகள் உரிய முறையில் கிடைக்கப்பெறவில்லை. இதன் காரணமாக சேதனப் பசளைகளை உரிய நேரத்தில் விவசாயிகள் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது.(4-5-299)

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியமும் கருவி நிறுவனமும் இணைந்து நடாத்திய பிரபல ஊடகவியலாளர் பொ.மாணிக்க வாசகத்தின் 'மாற்றத்தை நாடும் மாற்றுத் திறனாளிகள்' நூல் அறிமுக விழா-2022 நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவில் திருமணமண்டபத்தில் நடைபெற்றது. (படம்-ரவிசாந்)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 160 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 150 | 140 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 320 | 300 | 350 | 300 |
| தக்காளி | 160 | 120 | 140 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 80 | 80 |
| கோவா | 100 | 100 | 100 | 120 |
| கரட் | 250 | 200 | 250 | 300 |
| பூசணி | 60 | 100 | 70 | 80 |
| புடோல் | 150 | 150 | 150 | 140 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 160 | 200 | 250 |
| பெரிய வெங்காயம் | 160 | 150 | 150 | 200 |
| பாகற்காய் | 300 | 300 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 180 | 200 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 200 | 160 | 140 | 200 |
| லீக்ஸ் | 120 | 150 | 150 | 160 |
| பீற்றூட் | 160 | 120 | 140 | 160 |
| கறிமிளகாய் | 250 | 200 | 220 | 200 |
| முருங்கைக்காய் | 1400 | 1000 | 1200 | 1200 |
| போஞ்சி | 180 | 250 | 200 | 280 |
| கத்தரிதம்புள்ள | 180 | 120 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 100 | 70 | 80 | 80 |
| தேசிக்காய் | 120 | 120 | 150 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 140 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 200 | 160 | 140 | 250 |
| முள்ளங்கி | 60 | 80 | 70 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | -- | -- | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 15.03.2022-13.04.2022



**சிக்கனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் கும்ப இராசி வாசகர்களே!**

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ஏழரைச் சனியில் விரயச் சனியின் ஆதிக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## நிதானமும், பொறுமையும் தேவைப்படும் நேரம் இது

உங்கள் இராசிநாதன் சனியோடு பகைக் கிரகமான செவ்வாய் இணைந்திருப்பதால், வரவைக் காட்டிலும் செலவு கூடும். உடல்நலக் குறைபாடும், மருத்துவச் செலவுகளும் ஏற்படும். நிதானமும், பொறுமையும் தேவைப்படும் நேரம் இது.

### மீன -புதன் சஞ்சாரம்

பங்குனி 3 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு அஷ்டமாதிபதியான புதன் நீச்சம்பெறுவது ஒரு வழிக்கு நன்மைதான். அதேநேரம் அவர் பஞ்சமாதிபதியாகவும் விளங்குவதால் பிள்ளைகள் வழியில் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். உடன்பிறப்புகள் உங்களை உதாசீனப்படுத்தலாம். சேமிப்பு குறையும். எந்த முடிவெடுத்தாலும் அனுபவம் உள்ளவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது.

### ராகு-கேது சஞ்சாரம்

பங்குனி 7 ஆம் திகதி, மேஷ இராசிக்கு ராகுவும், துலாம் இராசிக்கு கேதுவும் செல்கிறார்கள். உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் ராகுவும், 9 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் உடன்பிறப்புகளுக்குள் பிரச்சினைகள் உருவாகும். தொழில் வளர்ச்சியில் சில குறுக்கீடுகள் வரலாம். எதிரிகளின் பலத்தை அறிந்துகொண்டு செயற்படுங்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் திடீர் இடமாற்றங்கள் உருவாக வாய்ப்பு உண்டு.

### மேஷ -புதன் சஞ்சாரம்

பங்குனி 22 ஆம் திகதி, மேஷ இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் ராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், மேஷத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழில் முயற்சியில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளின் ஆதரவோடு கேட்ட சலுகைகளைப் பெறுவர். 'முன்னோர் செய்த தர்மத்தை முறையாகச் செய்யவேண்டும்' என்ற எண்ணம் உருவாகும். ஆக்கப்பூர்வமாக செயல்பட்டு ஆதாயம் வருவதற்கான வழியைக் கண்டுகொள்வீர்கள்.




### கும்ப - செவ்வாய் சஞ்சாரம்

பங்குனி 23 ஆம் திகதி, கும்ப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். இதுவரை சனியுடன் இணைந்து சஞ்சரித்து வந்த செவ்வாய், இப்பொழுது கும்ப இராசியில் உள்ள குருவுடன் இணைந்து 'குருமங்கள யோகத்தை உருவாக்கப் போகிறார். இக்காலத்தில் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்துகொள்வர். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். மங்கல ஓசை மனையில் கேட்க வழி பிறக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து சில காரியங்களை முடித்துக்கொடுப்பர். இம்மாதம் பங்குனி உத்திரத்தன்று ராஜஅலங்கார முருகனை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். இருப்பினும் விரயச்சனியின் ஆதிக்கம் நடப்பதால் திடீர் விரயங்கள் ஏற்பட்டு திக்குமுக்காடவைக்கும். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். கணவன்- மனைவி உறவு பலப்படும். இல்லறத்தில் நல்லறமாக நடந்து கொள்வீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு இடமாற்றமோ, இலாகா மாற்றமோ உறுதியாகலாம்.

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**



**காரியங்களைச் செய்யும் முன்பாக ஆராய்ந்து முடிவெடுக்கும் மீன இராசி வாசகர்களே!**

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் குரு விரய ஸ்தானத்தில் இருக்கிறார். செவ்வாயோடு சேர்ந்து சனியும் உங்களைப் பார்க்கிறார். எனவே வீண் விரயங்களும், மனக்குழப்பமும், மருத்துவச் செலவும் ஏற்படும்.

## வீண் விரயங்களும், மனக்குழப்பமும், மருத்துவச் செலவும் ஏற்படும்

### மீன -புதன் சஞ்சாரம்

பங்குனி 3 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் நீச்சம் பெறுவது யோகம்தான். கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். கடல் தாண்டிச் செல்ல அழைப்புகள் வரும். திரும்பிச் சென்ற வரன்கள் மீண்டும் வந்து முடிவாகலாம். உத்தியோகத்தில் எதிர்பாராத முன்னேற்றம் உண்டு. நீண்டநாள் கோரிக்கையான ஊதிய உயர்வு இப்போது கிடைக்கலாம். மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பால் லாபம் குவிப்பீர்கள். நேர்முகத் தேர்வில் வெற்றி கிடைக்கும்.

### ராகு-கேது சஞ்சாரம்

பங்குனி 7 ஆம் திகதி, மேஷ இராசிக்கு ராகுவும், துலாம் இராசிக்கு கேதுவும் செல்கிறார்கள். உங்கள் இராசிக்கு 2இல் ராகுவும், 8இல் கேதுவும் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. தடைகளும், குறுக்கீடுகளும் வரத்தான் செய்யும். புது முயற்சிகளில், அனுபவம் உள்ளவர்களின் ஆலோசனை கைகொடுக்கும். கேது பலத்தால் உள்ளத்தில் ஒன்றும், உதட்டில் ஒன்றும் வைத்துப் பேசுபவர்களின் எண்ணிக்கை கூடும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.

### மேஷ - புதன் சஞ்சாரம்

பங்குனி 22 ஆம் திகதி, மேஷ இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தனவரவு திருப்திகரமாக இருக்கும். தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும். நூதனப் பொருட்களின் சேர்க்கை உண்டு. கட்டிய வீட்டைப் பழுதுபார்க்கும் முயற்சி கைகூடும். புதிய வேலைக்கு விண்ணப்பித் தவர்களுக்கு அது கிடைக்கலாம். வெளிநாட்டில் உள்ள உறவினர்களின் மூலம் ஒரு நல்ல தகவல் கிடைக்கும்.




### கும்ப - செவ்வாய் சஞ்சாரம்

பங்குனி 23 ஆம் திகதி, கும்ப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். இதுவரை சனியுடன் இணைந்து சஞ்சரித்து வந்த செவ்வாய், இப்பொழுது கும்ப இராசியில் குருவுடன் இணைந்து குருமங்கள யோகத்தை உருவாக்குகிறார். இருப்பினும் அவர்கள் இருவரும் விரய ஸ்தானத்தில் ஒன்று கூடுவதால் சுபவிரயங்கள் ஏற்படும். பணிபுரியும் இடத்தில் பக்குவமாக நடந்து கொள்ளுங்கள். உத்தியோகத்தில் திடீர் இடமாற்றங்கள் ஏற்படலாம். பொருளாதாரம் தேவைக்கேற்ப வந்துகொண்டேயிருக்கும். இம்மாதம் பிரதோஷ விரதமிருந்து நந்தியெம்பெருமானை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் வரவைக் காட்டிலும் செலவு கூடும். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவதன்மூலம்மட்டுமே ஆரோக்கியத்தை சீராக்கி கொள்ள இயலும். கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடு வராமல் இருக்க, ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுங்கள். பிள்ளைகளையும் உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது பிரச்சினைகளை தவிர்க்க வழிவகுக்கும். பணத்தைக் கையாளும் பணியில் இருப்பவர்கள், மிகுந்த கவனத்தோடு செயற்படுங்கள்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அம்புலிமாமா

# வேலு விரும்பியது!



(நேற்றைய தொடர்ச்சி)

வேலுவும் "மலை அடிவாரத்திலுள்ள குகையில்தான் இருக்கிறான். நீ போய் விபரமாக எல்லாவற்றையும் சொன்னால் அவன் உன்னோடு வருவான். பிறகு நீ கல்யாணம் செய்து வைக்கலாம்" என்றான். ராட்சஸனும் "நான் போய் அவனை இப்போதே அழைத்து வருகிறேன்" என்று கூறி மலை அடிவாரத்திற்கு இறங்கிச் சென்றான்.

ராட்சஸன் குகைக்குள் போனதைக் கண்ட வேலு மகாசக்தியிடம் "நீ இப்போதே நான்கு பாறாங்கற்களைப் பார்த்து அவற்றைக் கொண்டு அந்த குகையின் வாயிலை அடைத்து விடு" என்றான். மகாசக்தியும் அவ்வாறே செய்ய ராட்சஸன் குகைக்குள் அடைபட்டுப் போனான். வேலு மூவரையும் உடனே அழைத்துக் கொண்டு இளவரசி இருந்த அறைக்குச் சென்றான். அவன் அவளிடம் இனிமேல் ராட்சஸனால் எதுவும் செய்ய முடியாது என்பதைக் கூறி, தானும் மற்றவர்களும் தலைநகருக்குப் போகும் காரணத்தையும் விளக்கினான்.

இளவரசியும் அவன் கூறியதை எல்லாம் ஆச்சரியத்தோடு கேட்டாள். அவள் "இதெல்லாம் நான் கதைகளில் படிக்கும் ராஜகுமாரனின் வீரச் செயல்களைப் போல அல்லவா இருக்கிறது. உங்களிடம் ஒரு அரசருக்கு இருக்கும் அறிவும் ஆற்றலும் வீரமும் துணிச்சலும் இருக்கிறதே" என்று சிரித்துக் கொண்டே கூறினாள். அதன் பிறகு அவர்கள் ஐவரும் மலையிலிருந்து கீழே இறங்கி வந்தார்கள். அப்போது ஒலித்தம்பி "நில்லுங்கள் சற்றுத் தூரத்தில் ஒரு யானை வரும் சத்தம் கேட்கிறது" என்றான். அப்போது பேரொளி "அந்த யானை மீது ஒரு கிழவர் இருக்கிறார். யானையோடு பல குதிரை வீரர்களும் வந்து கொண்டிருக்கிறார்கள்" என்றான் அப்போது ரத்தின மாலை "அப்படியானால் அவர்கள் என்னைத் தேடிக் கொண்டுதான் வருகிறார்கள். அந்தக் கிழவர் அநேகமாக அமைச்சர் ஆனந்த சிம்மராகத்தான் இருக்க வேண்டும்" என்றாள்.


அப்போது வேலு "அப்படியானால் நாம் இப்போதே போய் அவர்களைச் சந்திப்போம். அவர் இந்நாட்டு அமைச்சராக இருந்ததால் அவரிடம் இளவரசியை ஒப்படைத்து மன்னரிடம் சேர்ப்பிக்கும்படி கூறி விட்டு நாம் நம் வேலையை கவனிப்போம்" என்றான்.

அவர்கள் சற்றுத் தூரம் செல்வதற்குள் ஆனந்த சிம்மரே இளவரசியையும் வேலுவையும் கண்டு விட்டார். அவர் யானை மீதிருந்து கீழே இறங்கி வேலுவை அணுகினார். வேலுவும் "நான் வேலு என்பவன். இந்த இளவரசியை ஒரு ராட்சஸன் சிறைபிடித்து வைத்திருந்தான். நான் இவளைக் கண்டு பிடித்து மீட்டு வந்தேன். இவளை அழைத்துக் கொண்டு போய் மன்னரிடம் ஒப்படைத்து விடுங்கள். நானும் தலை நகருக்குத் தான் இராணுவத்தில் சேரப் போய்க் கொண்டிருக்கிறேன்" என்றார்.

அமைச்சரோ "அது எப்படி? மன்னர் இளவரசியைக் கண்டு பிடித்து மீட்டு வருபவருக்கு இளவரசியை மணம் செய்து வைத்துத் தன் நாட்டில் பாதியை அளிப்பதாக அறிவித்திருக்கிறார். எனவே நீங்களும் இளவரசியோடு வாருங்கள். உங்கள் நண்பர்களையும் அழைத்து வாருங்கள்" என்றார். அது கேட்டு யாவரும் மகிழ்ந்து போனார்கள். இளவரசியோ வெட்கத்தோடு புன்னகை புரிந்தவாறே வேலுவைப் பார்த்துக் கொண்டு நின்றாள். (முற்றும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்




அதிர்ச்சி அடைந்தாள். "ஏழிரண்டு ஆண்டுதான்" என்று கால எல்லையைக் குறிப்பிட்டான்.

"ஆணையா? தண்டனையா? என்னால் வேறுபாடு காண இயலவில்லையே. இது வஞ்சனை, நஞ்சு அணையது; இனி உயிர் வாழேன்" என்றாள்.

ஒருகையை மற்றொரு கையால் நெறித்தாள்; பெற்ற வயிற்றைப் பிசைந்தாள்; வெய்து உயிர்த்தாள்; "மன்னன் கருணை நன்று" எனக்கூறி நகைத்தாள்; தானும் இராமனோடு செல்ல நினைத்தாள்.

"அரசனுக்கு நீ என்ன பிழை செய்தாய்? அறம் எனக்கு இல்லையோ?" என்று அலறினாள். தெய்வங்களை நொந்தாள்; கன்றைப் பிரியும் தாய்ப் பசுவைப் போலக் கலங்கினாள். இராமன் துயருறும் அன்னையைத் தேற்ற முனைந்தான் "மன்னவன் சொல் கேட்டு நடப்பது தானே-உனக்குப் பெருமை; கணவன் சொற் காத்தல் இல் காப்பவர்க்கு உரிய கடமை அன்றோ" என்றான். "மகனைப் பிரிந்து தவிக்கும் அவர் துயரை அவித்து ஆற்றுவது உன் கடன் அன்றோ! சாகும் போதும், மனம் வேகும் போதும் உற்றவர் அருகிலிருப்பது கற்றவர்க்குக் கடமை அன்றோ, அவரை ஆற்றித் தேற்றித் தவநெறிக்குச் செல்ல நீ துணை இருக்க வேண்டாவோ! பத்தினிப் பெண்டிர் கணவனுக்குப் பணி செய்வது தானே பாரத நாட்டுப் பண்பாடு! இல்லற தருமம் அது தான்; தவித்த வாய்க்குத் தண்ணீர் தருவது மானிட தருமமும் ஆகும்" என்று கூறி விடை பெற்றான். செய்தி முற்றி விட்டது என்பதை அறிந்தாள்; முதலுக்கே மோசம் வந்துவிட்டது என்று முந்தினாள். கேகயன் மகளின் தனி அறையில் கீழ்த்தரையில் புழுதியில் மன்னன் படிந்து கிடப்பதைக் கண்டு அழுது அரற்றினாள்.

"பொன்னுறு நறுமேனி புழுதிபடிந்து கிடப்பதோ?" என்று கூறிக் கதறினாள்; "சந்தனம் கமழும் மார்பு சகதியில் கிடக்கிறதே?" என்று கூறி நைந்தாள். வீட்டிற்கு எட்டிய செய்தி நாட்டுக்கும் பரவியது; மங்கல ஒலி மயங்கியது; மகிழ்ச்சி மக்களிடம் இருந்து நீங்கியது; அலறல் ஓங்கியது.

### அந்தப்புரத்தில் வசிட்டர்

வசிட்டர் கைகேயியிடம் நீதிகள், நியதிகள், மரபுகள், வரம்புகள், அறிவுரைகள் ஆயிரம் எடுத்துச் சொல்லியும் அவை செவிடன் காதில் ஊதிய சங்கு ஒலியாகியது. அவள் நெஞ்சு உறுதியை அசைக்கவில்லை.

தசரதன் விழித்துப் பார்த்தான்; வேர்த்தான் தன் உள்ளத்துக் குமுறல்களைக் கொட்டி ஆர்த்தான். அவன் செயற்கையாய்ச் செவிடன் ஆகிவிட்டான்; எதிரொலிகள் எதுவும் எடுபடவில்லை.

அழுது அயர்ந்த அரசி கோசலைக்கு அவன் தன் நிலையை விரித்து உரைத்தான். "தரையில் கொட்டிய பால், அதை மீட்டு எடுக்க முடியாது; தயிர் புளித்து விட்டது; மீண்டும் அதைப் பால் ஆக்க முடியாது; தந்த வரத்தை மீண்டும் திரும்பப் பெற முடியாது." (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புக்காக காத்திருக்காதே உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்திக்கொள்.
- அப்துல் கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புத்தரின் உருவச்சிலையை ஆதரிக்கின்ற நிலைமையில்...

ஒரு காலத்தில் வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் புத்தர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்படுமாயின், அதற்குப் பலத்த எதிர்ப்புகள் வெளிக்காட்டப்பட்டிருந்தன.

தமிழர் தாயகத்தில் புத்தர் சிலைகளை பிரதிஷ்டை செய்து தமிழர்களின் நிலத்தை அபகரிக்கப் போகிறீர்களா? என்ற வினாக்கள் தொடுக்கப்பட்டன.

ஆனால் இன்றிருக்கின்ற நிலைமை அதுவன்று.

ஆம், தமிழர் தாயகத்தில் புத்தர் சிலைகளைப் பிரதிஷ்டை செய்வதை ஏன்? எதிர்க்க வேண்டும் என்ற கேள்வியை சில இந்து அமைப்புகள் எழுப்பியுள்ளன.

அதாவது இந்து மத வழிபாட்டுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ள பௌத்த மத வழிபாட்டை நாம் எதிர்த்ததால் நடந்தது என்ன? நம் சிவபூமியில் சைவ சமயத்தை அழிக்கின்ற அக்கிரமம் நடந்தாகிறது.

திருக்கேதீச்சரத்தில் நந்திக் கொடியைச் சப்பாத்துக் காலால் உழக்கி, சைவத் தமிழர்களின் இதயங்களை நோகடித்ததை எப்படி நாம் மறந்துவிடமுடியும்.

அதுதான் என்றால் இல்லை. இன்னமும் திருக்கேதீச்சர நுழைவாயில் இடத்தில் ஆக்கிரமிப்புக்கள் நடந்து கொண்டே இருக்கின்றன.

எனினும் இது விடயத்தில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தலையிட்டு நிலைமையை சுமுகமாக்கவில்லை.

இன்னும் சிறிதுகாலத்தில் திருக்கேதீச்சரத்துக்குச் சென்று வழிபடுவதுகூட ஆபத்தானதாக அமையலாம்.

அந்தளவுக்கு நிலைமை மோசமாகி வருகிறது என்று குற்றம் சாட்டுகின்ற இந்து அமைப்புகள்;

எங்களுக்குள் இவ்வளவு வக்கிரம் தாண்டவமாடும்போது எங்கள் பிரதேசத்தில் புத்தர் சிலை அமைவதை எதிர்ப்பது எதற்காக? என்று கேள்வி எழுப்பியுள்ளன.

இவ்வாறு கேள்வி எழுப்புகின்ற குறித்த இந்து அமைப்புகள் அதுதொடர்பில் பல்வேறு கருத்துக்களை முன்வைத்து அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளன.

அதில் பௌத்த விகாரைகளில் பிள்ளையார், சிவன், காளி அம்மன், முருகன், கிருஷ்ணன் என இந்துத் தெய்வங்கள் வைக்கப்பட்டு வழிபாடு செய்யப்படுகின்றன.

கடந்த சிவராத்திரி தினத்தன்று யாழ்ப்பாணம் நாகவிகாரையில் சிவவழிபாடு நடைபெற்றது.

அவ்வாறாயின், இந்து மத வழிபாட்டைப் பின்பற்றக்கூடிய பௌத்த மதத்தை - இந்து சமயத்தை தன் தாய்ச்சமயமாகக் கொண்ட புத்தபிரானை எதற்காகச் சைவத் தமிழ் மக்கள் எதிர்க்க வேண்டும் என்ற கேள்வியை பிரஸ்தாப இந்து அமைப்புகள் முன்வைத்துள்ளன.

இதற்கும் மேலாக, சிவசேனை என்ற அமைப்பின் ஓர் அறிக்கையில்; பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நல்லூர் முருகன் ஆலயத்தில் வழிபாடு செய்வதைத் தடுத்ததன் பின்னணி என்ன? என்ற ஐயவினா கேட்கப்பட்டுள்ளது.

இதற்கும் மேலாக, இந்து - பௌத்த அமைப்புகளும் அவதாரம் எடுத்துள்ளன.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது எங்கள் தமிழினம் சமயத்தால் பேதப்படாமல் இருந்திருந்தால், இக்கதி நேர்ந்திராதே என்று மனம் அங்கலாய்க்கிறது.

# வடக்கின் கலாசார விழுமியங்கள் பலப்படுத்தப்படும் - வடக்கு ஆளுநர்

வடக்கிலுள்ள கலாசார விழுமியங்களை மத்திய கலாசார அமைச்சுடன் இணைந்து பலப்படுத்தப்படும் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழில் உள்ள வடமாகாண ஆளுநர் இல்லத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் உள்ள கலாசார விழுமியங்களை மத்திய கலாசார அமைச்சுடன் இணைந்து பாதுகாப்பதற்கு ஏதுவாக துறைசார்ந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடலை நடத்தினோம்.

வடக்கில் உள்ள அருங்காட்சியகத்தைப் புதுப்பித்தல், கலைப்பொருட்களின் பிரதிகளை புதுப்பித்தல், பாரம்பரிய கைவினைப் பொருட்களை மேம்படுத்துதல், தொல்லியல் மற்றும் இளைஞர்களின் ஆக்கங்களை தொடர்ச்சியாக ஆவணப்படுத்தல் என்பன முன்னெடுக்கப்படும்.

மேலும் யாழில் கையளிக்கப்படவுள்ள கலாசார மத்திய நிலையம் எமது மக்களுக்கு கிடைத்துள்ள ஒரு வரப்பிரசாதமாகக் கருதும் நிலையில் அதனூடாக எமது கலை கலாசார விழுமியங்களை வளர்க்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். குறித்த கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், மத்திய கலாசார திணைக்களப் பணிப்பாளர் நாயகம், தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

(ஞா-104)

# வீதியில் செல்ல முடியாத நிலைமை தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ளது

## ஆளும்கட்சி எம்.பி கவலை

(கொழும்பு)

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள எரிபொருள் மற்றும் எரிவாயு பிரச்சினைகளுக்கு அரசாங்கம் விரைவான தீர்வை முன்வைக்க வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளனர்.

நாட்டு மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளதால் வீதியில் செல்ல முடியாத நிலைமை தற்போது தோற்றம் பெற்றுள்ளது என ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பிரமித பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள பொதுமக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு நிலையான தீர்வை அரசாங்கம் விரைவாக முன்வைக்க வேண்டும். அரசாங்கத்தின் சரியான தீர்மானங்களை வரவேற்று, தவறான தீர்மானங்களை விமர்சிக்கும் கொள்கையுடன் பொதுஜன பெரமுனவின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து செயற்படுகிறோம்.

எரிபொருள் மற்றும் எரிவாயு பிரச்சினை தீவிரமடைந்துள்ளதால் நடுத்தர மக்களின் அன்றாட வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து அரசாங்கம் சிறந்த தீர்மானங்களை செயற்படுத்த வேண்டும் என்றார். (ஞா)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை 22 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ் பிரதேசத்தில்** டச்சு வீதி, சங்குவேலி, மாப்பியன், சுதுமலை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக், மகாறம்பைக் குளம், சமணங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# லாஃப் காஸ் சிலிண்டர் விலையும் அதிகரித்தது

(கொழும்பு)

லாஃப் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

லாஃப் சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகஸ்தர்கள் இதனை தெரிவித்துள்ளனர்.

அதன்படி, 12.5 கிலோ கிராம் லாஃப் சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்று 4,199 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 1,680 ரூபாயாகவும் மற்றும் 2 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 672 ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஞா)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## உள்ளத்தின் சோதனை



மனதின் நிலையே வாழ்வின் வளம் ஆகும். நிலத்தில் ஊன்றும் வித்து எதுவென்றாலும் நீர் தெளித்து வந்தால் அது முளைத்துப் பயிராகி அதனதன் தன்மைக்கேற்ற பயன் தருகின்றது.

அது போன்றே உள்ளத்தில் ஊன்றும் எண்ணங்களும் நாளுக்கு நாள் உறுதி பெற்று, வாழ்வின் பயனாக விளைந்து விடும். ஆகவே, நமது வாழ்வு நலமுற வேண்டுமெனில் எந்தவிதமான கெட்ட எண்ணத்தையும் நமது உள்ளத்தில் ஊன்றவோ, வளரவிடவோ கூடாது.

கோபம், வஞ்சம், பொறாமை, வெறுப்புணர்ச்சி, பேராசை, ஒழுக்கம் மீறிய காம நோக்கம், தற்பெருமை, அவமதிப்பு, அவசியமற்ற பயம், அதிகாரப் போதை என்ற பத்து வகையும் நமது உள்ளத்தில் நிறைபெறவொட்டாமல் அவ்வப்போது ஆராய்ந்து, களைந்து கொண்டே இருக்க வேண்டும்.

இவை வளர்ந்தால் நல்லெண்ணம் வருவதற்கோ, நிலைப்பதற்கோ, இடமில்லாத துன்பம் தரும் காடாக நமது உள்ளம் மாறி விடும். உடல் காந்த சக்தியைப் பாழாக்கிக் கொண்டே இருக்கும் ஓட்டைகளாக, இக்கெட்ட குணங்கள் மாறிவிடும்.

காலையிலும், மாலையிலும் 10 நிமிட நேரம் அமைதியாக உட்கார்ந்து உள்ளத்தைச் சோதனையிடும் பயிற்சியைத் தொடங்குங்கள். 30 நாட்களில் கிடைக்கும் வெற்றியை அனுபவத்தில் கண்டு மகிழுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 24

அட்டவணை (e1): இன மற்றும் மத அடிப்படையிலான சனத்தொகை வேறுபாடு

மாத்தளை மாவட்டம்

| இனம் | எண்ணிக்கை | % | மதம் | எண்ணிக்கை | % |
|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 391,305 | 80.8 | பௌத்தம் | 385,151 | 79.5 |
| இலங்கைத் தமிழர் | 24,279 | 5.0 | இந்து | 43,432 | 3.0 |
| இந்தியத் தமிழர் | 23,238 | 4.8 | இஸ்லாம் | 45,682 | 3.4 |
| இலங்கை முஸ்லிம் | 44,786 | 9.2 | உரோமன் கத்தோலிக்கம் | 7,899 | 1.6 |
| வேறு | 923 | 0.2 | வேறு கிருஸ்தவம் | 2,342 | 0.5 |
| | | | வேறு | 25 | 0.0 |
| மொத்தம் | 484,531 | | மொத்தம் | 484,531 | |

மாத்தளை மாவட்டத்தில் பிரதேச செயலக மட்டத்தில் சிறுபான்மைச் சமூகங்கள்-2012

| பிரதேசச்செயலகம் | தமிழர் | முஸ்லீம் |
|---|---|---|
| கலேவெல | 1070 | 9289 |
| தம்புள்ள | 841 | 2087 |
| நாவுல | 1461 | 384 |
| பல்லெபொல | 1163 | 1086 |
| யட்டவத்த | 3060 | 1959 |
| மாத்தளை | 13830 | 13946 |
| அம்பங்கங்ககோரலே | 3798 | 75 |
| லக்கல - பல்லேகம | 208 | 0 |
| வில்கமுவ | 16 | 5 |
| ரத்தொட்ட | 12276 | 1994 |
| உக்குவெல | 9794 | 13961 |
| மாத்தளை மாவட்டம் | 47517 | 44786 |

## மாத்தளை மாவட்டத்தின் மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் (2017)

மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால், மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்திற்கு 11 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப் பட்டனர். 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 A (2) இன் படி மாத்தளை மாவட்டம் 6 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் அத் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.

மாத்தளை மாவட்டத்தில் 11 பிரதேச செயலகங் களுக்கு உட்பட்ட 545 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 484,531 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 80,755 ஆக நிர்ண யிக்கப்பட்டிருந்தது.

**மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால், மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்திற்கு 11 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக் கப்பட்டனர். இதன்படி மாத்தளை மாவட்டம் 6 மாகாண சபை உறுப் பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் அத் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.**

**மாத்தளை மாவட்டத்தில் 11 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 545 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 484,531 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பி னரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத் தொகை 80,755 (16.7%) ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.**

மாத்தளை மாவட்ட செயலகத்தில் 22.11.2017 காலை பொதுமக்களுடன் நடைபெற்ற கூட்டத்தில், பெற்றுக்கொள்ளப்பட்ட 10 பிரேரணைகளுடன், பொதுமக்களிடம் எழுத்து மூலம் சமர்ப்பிக்கும் படி கேட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட 05 பிரேரணைகள் அடங்கலாக மொத்தம் 15 பிரேரணைகளை குழு பெற்றுக் கொண்டது.

அதிகமான பிரேரணைகளின் பரிந்துரைகள் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயம் செய்ய வேண்டிய முறைபற்றி கூறியிருந்தாலும் அவற்றுள் சில சரியான தகவல்களைத் தர வில்லை. அவற்றுள் பல பரிந்துரைகளில் பிரதேச செயலக பிரிவுகளின் எல்லைகளை அடிப்படை யாகக் கொண்டு எல்லை நிர்ணயம் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தன. ஒரு பிரே ரணை உள்ளூர் அதிகாரசபை எல்லைகளை மையப்படுத்தி எல்லை நிர்ணயம் இருக்க வேண்டும் என்று கூறியது. அனைத்து மக்கள் தொகை தகவல்களும் நிர்வாகப்பிரிவு அடிப் படையில் மட்டுமே கிடைக்கப்பெற்றன.

அதாவது, கிராம உத்தியோகத்தர் பிரிவுத்தகவல் மற்றும் பிரதேச செயலக பிரிவுத் தகவல் ஆகும். இதனால் குழுவானது உள்ளூர் அதிகார சபை எல்லைகளை விட பிரதேச செயலகங்களின் தகவல்களையே எல்லை நிர்ணயத்திற்கு அடிப்படையாக எடுத்துக்கொண்டது. அதே நேரத்தில் நடைமுறை நோக்கங்களுக்காக தற்போது இருக்கும் ஏனைய தேர்தல் தொகுதி களின் எல்லைகளைக் கூறு போடுவதை குறைப் பதற்கான தேவையை அறிந்து கொண்டது.

எவ்வாறாயினும் சாத்தியமான வேளைகளில் குழுவானது முன்வைக்கப்பட்ட பிரேரணை முன்மொழிவுகளை முடியுமானவரை பிரதேச செயலகங்களை தேர்தல் தொகுதிகளுக்கு இணைக்கும் போது சேர்த்துக்கொண்டுள்ளது. இவை தவிர தேர்தல் தொகுதிகளின் சனத்தொகை எண்ணிக்கையில் ஒத்திசையாத தன்மையைக் குறைப்பதற்காக ஒத்துக்கொள்ளப்பட்ட சராசரி சனத்தொகையின் விலகலின் வரம்புகளுக் குட்பட்டதாகவும், 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 (A) (4) (b) யும் கருத்திற் கொண்டுள்ளது.

சில பிரேரணைகள் பரிந்துரைத்ததாவது மாத்தளை, ரத்தோட்டை, உக்குவளை பிரதேசங் களுக்கு பல் அங்கத்தவர் கொண்ட தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டும் என்பதே ஆகும். ஏனெனில் சிறுபான்மையின் (முஸ்லிம் கள் மற்றும் தமிழர்கள்) சமூக விருப்பங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதை உறுதி செய்வதற் காகவே.

முழு மாவட்ட சனத்தொகையிலும் முஸ் லிம்கள் மற்றும் தமிழர்கள் முறையே 9.2% இலும் மற்றும் 9.8% இலும் உள்ளதை குழு அவதானித்தது. இப் பிரதேசங்களை இரட்டை அங்கத்தவர் தொகுதியாக எல்லை நிர்ணயம் செய்ய முடியவில்லை.

இதற்கான காரணம் இரட்டை அங்கத்தவர் தொகுதிக்கு தேவையான சனத்தொகையில் அவர்களின் தொகை 35% இலும் குறைவாக இருந்ததே. எனவே இதனை இரட்டை அங்கத் தவர் தொகுதியாக எல்லை நிர்ணயம் செய்தா லும் எதிர்பார்க்கும் பிரதிபலனை சிறுபான்மை இனத்தவர்கள் பெறுவது நடைமுறைச் சாத்திய மற்றது.

மேலும் எல்லா இனத்தவர்களின் சமநிலை பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து இயலக்கூடிய வகையில் குறிப்பிட்ட தொகுதிகளுக்குள் அவர்களின் வாக்குப்பலம் செறிவாக இருக்கும் வகையில் தொகுதி எல்லை நிர்ணயம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

**சில பிரேரணைகள் பரிந்துரைத்த தாவது மாத்தளை, ரத்தோட்டை, உக்கு வளை பிரதேசங்களுக்கு பல் அங்கத் தவர் கொண்ட தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டும் என்பதே ஆகும். ஏனெனில் சிறுபான்மையின் (முஸ்லிம்கள் மற்றும் தமிழர்கள்) சமூக விருப்பங்களை பிரதிநிதித்து வப்படுத்துவதை உறுதி செய்வதற் காகவே.**

நான்கு (04) சமர்ப்பிப்புகளுக்கு குழுவினால் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை. ஏனென்றால் அவை எந்த முன்மொழிவுகளையும் கொண்டிருக்க வில்லை மற்றும் குழுவின் பொறுப்பு ஆணை களுக்கு உட்பட்டதாகவும் அமையவில்லை.

தொகுதிகளுக்கு பெயரிடும்போது, சிலவற் றுக்கு சரித்திர பிரசித்திபெற்ற பெயர் இடப்பட் பட்டுள்ளது. மற்றைய தொகுதிகளுக்கு அத் தொகுதியிலுள்ள ஒரு பிரதேச செயலகத்தின் பெயரை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் சனத்தொகை அடிப்படையில் இட தீர்மானிக்கப்பட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தண்ணீர்க்...

வைக்கப்பட்ட தண்ணீர்க் கானில் தவறி வீழ்ந்தே குழந்தை உயிரிழந்துள்ளது.

புதுக்குடியிருப்பு கைவேலிப்பகுதியினைச் சேர்ந்த சியோன்ஷன் என்ற ஒரு வருடமும் மூன்று மாதமுமான குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

வீட்டில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தை மலசலகூடத்தினுள் வைக்கப்பட்டிருந்த வெட்டிய தண்ணீர்க் கானில் வீழ்ந்து உயிரிழந்துள்ளது. (ஞா)

## முள்ளிவாய்...

ள்ளது.

விபத்துக்குள்ளான பேருந்தில் 40இற்கும் மேற்பட்ட பயணிகள் பயணித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் பலர் காயமடைந்துள்ள நிலையில் முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்றை குறித்த தனியார் பேருந்து முந்திச் செல்ல முற்பட்ட போது, இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா-281)

## கூட்டமைப்பு...

காணப்பட வேண்டுமாயின் இறைமை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அதனை சர்வகட்சிகளின் மாநாட்டில் சுமந்திரனுடன் பங்கேற்று வலியுறுத்துவேன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நாளை மறுதினம் சர்வகட்சிக்குழு மாநாடு நடைபெறவுள்ள நிலையில் அதில் பங்கேற்பது குறித்தும் வெளிப்படுத்தவுள்ள விடயங்கள் குறித்தும் கருத்து வெளியிடுகையிலேயே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள சர்வகட்சிகளின் மாநாட்டில் பங்கேற்குமாறு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டதோடு அதற்காக இரு பிரதிநிதிகளின் பெயர்களையும் முன்மொழியுமாறு கோரப்பட்டது.

அதற்கு அமைவாக, நானும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் அம் மாநாட்டில் பங்கேற்பதாக அறிவித்துள்ளோம். இந்நிலையில் 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல் தற்போது வரையில் இனப்பிரச்சினை உட்பட பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. தற்போது அப்பிரச்சினைகளுடன் பொருளாதார ரீதியாக நெருக்கடியான நிலைமைகள் உருவெடுத்துள்ளன.

இப்பிரச்சினைகள் அனைத்தும் தீர்வினை எட்டுவதாக இருந்தால் மக்களுக்கான இறைமை பகிரப்பட வேண்டும். மக்களின் இறைமை பகிரப்படுத்தப்படுமிடத்து அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வினைக் காணமுடியும். துரதிஷ்டவசமாக இந்த விடயம் நடைமுறைச்சாத்தியமாகாத நிலைமைகள் தொடருக்கின்றன. ஆகவே தற்போதைய பொருளாதார நெருக்கடிகளில் இருந்து நாட்டை மீட்டெடுப்பது உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வாக மக்களுக்கான இறைமையை பகிர்ந்தளிக்குமாறு வலியுறுத்தவுள்ளேன். அத்துடன், விசேடமாக தமிழ் மக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளையும் எடுத்துக்கூறவுள்ளேன் என்றார். (ஞா)

## ராஜபக்ச...

வெறுப்பினைச் சந்தித்து வீழ்ச்சி கண்டுள்ள ராஜபக்சக்களுக்கு உயிர்கொடுக்க முடியாது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்பது குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சிப்பொறுப்பினை கையிலெடுத்து இரண்டு ஆண்டுகளாகின்றபோதும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் கலந்துரையாடுவதற்கே தயக்கம் காண்பிக்கின்றார்கள். அதுமட்டுமன்றி நாட்டில் இனப்பிரச்சினையே இல்லையென்று கூறியும் வருகின்றார்கள்.

இதனைவிடவும் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவினர்கள் தமது அன்புக்குரியவர்களை தேடி போராட்டங்களைச் செய்துவருகின்ற நிலையில் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் தருவதாக கூறி மக்களின் வேதனையுடன் விளையாடுகின்றார்கள்.

அதேபோன்று பயங்கரவாத தடைச் சட்டத்தினை திருத்துவதாக கூறினாலும், நீண்டகாலத்திற்கு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தாது தடுத்து வைத்தல் உள்ளிட்ட முக்கியமான விடயங்களை கைவிடுவதற்கு தயாராக அவர்கள் இல்லை. வெறுமனே கண்துடைப்புக்கானதொரு செயற்பாடாகவே பயங்கரவாத சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு முயற்கின்றனர்.

ஆகவே, இவ்விதமான பின்னணிகளைக் கொண்டவர்கள் கூட்டும் சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்பதில் தமிழ் மக்களுக்கு எவ்விதமான நன்மைகளும் கிடைக்கப் போதில்லை என்றார். (ஞா)

## மகிந்த...

யாழ்ப்பாணத்திற்கு இரண்டு நாட்கள் விஜயமாக நேற்று வருகைதந்த பிரதமர் மகிந்த ராஜபக்ச நேற்றுக் காலை மட்டுவிலில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையத்தினை திறந்து வைத்தார்.

குறித்த நிகழ்வுக்கு பிரதமர் வருவதனை எதிர்த்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் உள்ளிட்டோர் எதிர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுக்க முயன்றனர்.

நிகழ்வு நடைபெறும் இடத்தில் போராட்டத்தினை முன்னெடுக்க முல்லைத்தீவில் இருந்து வந்திருந்தவர்களை மட்டுவில் அம்மன் ஆலயத்திற்கு அருகில் பொலிஸார் தடுத்து நிறுத்தி வாகனத்தில் இருந்து இறங்காதவாறு தடுத்து நிறுத்தி இருந்தனர்.

அதேவேளை யாழில் இருந்து சென்ற வேலன் சுவாமிகள் உள்ளிட்டோர் மட்டுவில் வண்ணாத்தி பாலம் பகுதியில் தடுத்து நிறுத்திய பொலிஸார் அவர்களையும் வாகனத்தில் இருந்து இறங்காதவாறு தடுத்து நிறுத்தி இருந்தனர்.

இந்நிலையில் நிகழ்வினை முடித்துக் கொண்டு பிரதமர் நிகழ்விடத்தில் இருந்து புறப்பட்டதும், போராட வந்தவர்களை பொலிஸார் செல்வதற்கு அனுமதித்தனர்.

அதனை அடுத்து வாகனத்தில் இருந்து இறங்கிய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உள்ளிட்டோர் பிரதமரை வரவேற்று கட்டப்பட்டு இருந்த பதாகைகளை கிழித்து, தீயிட்டு எரித்து தமது எதிர்ப்பினையும் ஆற்றாமையையும் வெளிப்படுத்தினர். (ஞா-18,33,104)

## வடக்...

பாலமாக யாழ் தேவி புகையிரதத்தை கருதுகிறேன். எமது ஆட்சியில் இரு மாகாணங்களுக்குமிடையிலான நல்லுறவு அபிவிருத்தி ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என பிரதமர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

200 மில்லியன் ரூபாய் செலவில் யாழ்ப்பாணம் மட்டுவிலில் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாணம் விசேட பொருளாதார மத்திய நிலைய திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடக்கு மக்கள் உணவு உண்பதற்கும் பல் துலக்குவதற்கும் மாத்திரம் வாய் திறப்பார்கள் என்ற வழக்கு அக்காலப்பகுதியில் காணப்பட்டது. நாங்கள் அதனை மாற்றியமைத்து அவர்களுக்கான சுதந்திரத்தை பெற்றுக்கொடுத்தோம் என்றார். (ஞா)

## மிகவு...

சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கட்டுகம்பொல - பன்னல - நாலவ லான பல்லவ்கும்புர சிறி விஜயராம விகாரையின் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சைத்திய கோபுர திறப்பு விழா எதிர்க்கட்சித் தலைவர் தலைமையில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இங்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

பொய்கள், கட்டுக்கதைகள் மூலம் நாட்டை நடத்தும் அரசாங்கம் நாட்டை பொய்யாக்கி மக்களை வீதியில் தள்ளியுள்ளதாகவும் வரிசைகள் யுகத்தில் நிற்கும் மக்கள் மிகவும் ஆதரவற்ற நிலையில் இருக்கின்றனர் என்றார். (ஞா)

## சூறாவளி...

மாறியுள்ளது.

மற்றும் தென்கிழக்கு வங்காள விரிகுடா மற்றும் அதை ஒட்டி நேற்று காலை 08.30 மணிக்கு மையம் கொண்டிருந்தது.

ஏறக்குறைய வடக்கு நோக்கி நகர்ந்து, இன்று காலை 05.30 மணிக்கு ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடையும்.

அத்தோடு இன்றையதினம் சூறாவளி புயல் எச்சரிக்கையும் வடக்குக்கு விடுக்கப்பட்டுள்ளது. (ஞா)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 20/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1226
வெற்றி இலக்கங்கள்
மகரம் 7 0 1 3 9 2

மெகா பவர்
திகதி 20/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1060
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
B 01 48 72 75 76

மஹஜன சம்பத
திகதி 2022/03/20
சீட்டிழுப்பு இலக்கம் 4712
L 3 8 0 5 7 2

தன நிதானய
திகதி -2022.03.20
சீட்டிழுப்பு இலக்கம் - 742
U 37 49 75 77
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

அத கோடிபதி
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1515
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2022.03.20
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,898,040/-
வெற்றி இலக்கங்கள் 06 38 70 77 E
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.03.20
சீட்டிழுப்பு இல: 3850
வர்ணம்: இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,470,800/-
வெற்றி இலக்கங்கள் 03 19 46 61 R
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 149
சீட்டிழுப்பு திகதி 20.03.2022 ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 12 19 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,318,700/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1689
நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 20.03.2022
தினம் ஞாயிறு
I 15 30 42 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் : ரூபா 53,524,958/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,858,562/-
திகதி 20.03.2022
சீட்டிழுப்பு வாரம் 3401
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 07 15 47 59 விருச்சிகம்
2 5 0 4 4 2 3
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,503,940/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 36 10 26 59 75
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 865
வர்ணம் மஞ்சள்
திகதி 2022.03.20 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 223,891,663/-
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவிட்டபுரம்...

இதன்போது மாவை ஆதீன ஹர்த்தா மகாராஜ ஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள் தலைமையில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. இதன்போது பிரதமருக்கு நினைவுப் பரிசொன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

இதேவேளை, நல்லூரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது என வழங்கப்பட்ட தகவலையடுத்து இந்த மாற்றம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. பிரதமர் மகிந்த ராஜபக்சவின் நல்லூர் ஆலய விஜயத்தை முன்னிட்டு ஆலயச் சூழலில் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருந்ததுடன் வீதிகளும் மூடப்பட்டிருந்தன.

இந்நிலையில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திற்கான பிரதமரின் விஜயம் ரத்துச் செய்யப்பட்டதை அடுத்து பாதுகாப்புத் தரப்பினர் அங்கிருந்து விலகிச் சென்றனர். (ஞா-18.33)

## யாழில் மதவேற்...

யாழுக்கு இரண்டு நாட்கள் விஜயம் மேற்கொண்ட பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இந்து, பௌத்த மதங்களிடையே மத வேற்றுமைகளை தோற்றுவித்துள்ளதாக சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

நயினாதீவு ரஜமஹாவிகாரைக்குச் சென்ற பிரதமர் மகிந்த, பௌத்த பிக்குவிடம் நின்றுகொண்டு சன்னாஸ் பத்திரத்தை வழங்குவதையும் இதேவேளை மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்ற பிரதமர் மகிந்த ஆலய ஆதீனகர்த்தாவிடம் இருந்துகொண்டு நினைவுப் பரிசொன்றைப் பெற்றுக் கொள்கின்ற படங்களும் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.

இது இந்து மக்களிடையே பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. (ஞா)

தேவை

எமது சிறுவர் இல்லத்திற்கு
- பெண் பராமரிப்பாளர்
- உளவளத் துணையாளர்
- களஞ்சிய காப்பாளர்
- முகாமையாளர் (ஆண்)

உடன் தொடர்புகொள்ளவும்!!!!!
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
(நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)
071 535 4500
(10689)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் 100% பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536

அருள்
இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை.
இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.
தொ.பே:- 076 443 1576
(C-4014)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (10639)
076 825 7716 (ஆகாஸ்)


காணி விற்பனைக்கு
யாழ்.கைதடி தெற்கில் விக்னேஸ்வரா வித்தியாலயம் அருகாமையில் 9 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
2 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.
- கைதடி சந்தியில் இருந்து 600 மீற்றர் தூரம்
- நல்ல சூழலில்
- கைதடி சந்தி பெற்றோல் நிரப்பு நிலையம் (ஏ9 வீதி) அருகாமை வீதியில்
074 291 3725, 074 291 3726
(10712)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(10652)

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு
A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-4022)
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்.
0777-068-777

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு
யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சிற்றுண்டி உணவகத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவை.
அனுபவம் அவசியமில்லை
பயிற்சி வழங்கப்படும்
சம்பளம் 20'000/-
(C-4021)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். 0777-068-777

# மரண அறிவித்தல்



இல.71/26A, கருவப்புலம் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

திருவாளர்

## கனகசுந்தரம் முத்துச்சாமி

{தலைமை உத்தியோகத்தர் - தலவாக்கல, பலாங்கொடை, மஸ்கெலியா தேயிலைக் கூட்டுத்தாபனம் (Head Factory Office - State Plantation), யாழ் மஸ்கன் நிறுவனம்}

| தோற்றம்: | மறைவு: |
| --- | --- |
| 09.05.1941 | 20.03.2022 |

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் இல.71/26A, கருவப்புலம் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசுந்தரம் முத்துச்சாமி {தலைமை உத்தியோகத்தர் - தலவாக்கல, பலாங்கொடை, மஸ்கெலியா தேயிலை கூட்டுத்தாபனம் (Head Factory Office - State Plantation), யாழ் மஸ்கன் நிறுவனம் ஆகிய நிறுவனங்களில் பணியாற்றியவர்} அவர்கள் நேற்று (20.03.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசுந்தரம் - சிவகாமசுந்தரி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற செல்வராயன் மற்றும் ஞானரஞ்சிதம் தம்பதியரின் அன்பு மருமகனும் சாந்தினியின் (ரஞ்சி) அன்புக் கணவரும் Dr.மலரவன் (கண் வைத்திய நிபுணர் - போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), மலரினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் துஷ்யந்தினி, சுந்தரகுமாரன் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான திரிபுரசுந்தரம், சிவஞானசுந்தரம், கமலசுந்தரி, அழகானந்தசுந்தரம், தெய்வசுந்தரி, அழகானந்தசுந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வரஞ்சிதம், செல்வக்குமார் ஆகியோரின் மைத்துனரும் கனிஷ்கா, சந்தீஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.03.2022) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காலை 11 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(10714)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.